# தென்றல்

பதிவு இலக்கம் : 361910

காற்று : 05 சுகந்தம் : 20 (தை - பங்குனி) 2013



வாசகர்களுக்கு இனிய புதுவருட, தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!!!

65/=



கோவிலூர் செல்வராஜன்

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புதுவருட, தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!!!

Life's Good

# LG Abans

*Show Room*


## மடிக்கணிணிகள்



## LED 3D தொலைக்காட்சி



## ஹொப்



## வளிச்சீராக்கிகள்



## LG சலவை இயந்திரம்



(நிபந்தனைகளுக்குட்பட்டது)

**தொடர்புகளுக்கு....**
அபான்ஸ் காட்சியறை,
263, 265, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
தொலைபேசி இல : 065-2227895

AD/0020

# தென்றல்
# THENDRAL

44/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு
தொ.பே : 077 - 6983597
பெக்ஸ் : 065 - 2227542
Email:- kirupabatticaloa@yahoo.com

**ஆசிரியர்**
க. கிருபாகரன்

**ஆசிரியர் குழு**
திரு. வீ. கே. ரவீந்திரன் (ரவிப்ரியா)
கலாபூஷணம் இ.கோபாலபிள்ளை
திருமதி.கவிதா.கிருபாகரன்
கலாபூஷணம்.ஆ.அரசரெத்தினம்

**ஆலோசகர்**
இரா. நாகலிங்கம்
(அன்புமணி)

**ஓவியம்**
சி.டானியல்

**கணணி வடிவமைப்பு**
அ.ஜெயலக்ஸ்மி

**ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர். (ஆ—ர்)**




## "தை பிறந்தால் வழி பிறக்கும்!!!

"தை பிறந்தால் வழிபிறக்கும்" எனும் பழமொழிக்கமைய **"தென்றல்"** ஆசிரியர்பீட உறுப்பினர் இ.கோபாலபிள்ளை சைவப் புலவர் பரீட்சையில் சித்தியடைந்து **"சைவப் புலவர்"** ஆக அண்மையில் பட்டம் பெற்றார். இந்தச் சூடு தணியும் முன்னரே இந்துக் கலாசார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள **"கலாபூஷணம் - 2012"** பெறுவோர் பட்டியலிலிலும் இடம் பெற்று **"கலாபூஷணம்"** விருது பெற்றுச் சாதனை மேல் சாதனை படைத்துள்ளார்.

இவரோடு **"தென்றல்"** ஆரம்பமான காலம் முதல் கட்டுரைகளை எழுதிவரும் முன்னாள் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரும், தொல்லியல் ஆய்வாளருமான க.தங்கேஸ்வரி, முன்னாள் கிழக்கு மாகாணக் கலாசார உதவிப் பணிப்பாளர் எஸ்.எதிர்மன்னசிங்கம், பிரபல

யோகா சிகிச்சை நிபுணர் செ.துரையப்பா ஆகியோரும் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

இத்தகைய சாதனையாளர்களை **"தென்றல்"** ஏற்கனவே பெற்றிருப்பதன் மூலம் **"தென்றல்"** இன் பலம் - பெருமை - ஆற்றல் மேலும் உயர்ந்து நிற்கிறது.

இவர்களைத் **"தென்றல்"** மனதார வாழ்த்துவதோடு, இவர்களின் கலை, இலக்கியப் பணி மேலும் - மேலும் வளர்ச்சியடைய வேண்டுமெனத் **"தென்றல்"** மனதார வேண்டுகிறது.

**என்றென்றும் அன்புடன்**
**-ஆசிரியர்-**

## தென்றல் கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| ஓராண்டு கட்டணம் | 300/= | US$20 |
| ஆயுள் கட்டணம் | 4000/= | US$100 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "தென்றல்" இலவசமாக வழங்கப்படும்.

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | 2000/= | 1000/= |
| முன் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| பின் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| உட்பகுதிகள் | 1000/= | 500/= |

## அன்பளிப்பு

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.
கணக்கு இல : 113100170002181
(நடைமுறைக்கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

உலகின் செம்மொழித் தகுதி பெறுவதற்கு தகைமைகள் பல வேண்டும், தொன்மையான, தொடர்ச்சியான, உலகப் பொதுமையான, மனித விழுமியங்களை தன்னகத்தே கொண்டதான, எளிமையான, இனிமையான இலக்கியங்களும் மொழியின் பழமை, செழுமை, தனித்துவம், கட்டுக்கோப்பு என்பவற்றைப் பேணுகின்ற இலக்கணங்களும் முதன்மை பெறுகின்றன. பேசும் போதும், வாசிக்கும் போதும், பாடும் போதும், நடிக்கும் போதும், எழுதும் போதும் அச்சு ஊடகங்களிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் செம்மொழியாக தகுதி பெற்ற எம் தாய் மொழியாம் தமிழ் மொழியை பேணி வளர்க்க முயல்வோமாக!

- கலாபூஷணம், ஆறுமுகம், அரசரெத்தினம் -

# 1 அணிகள்

உலகின் செம்மொழிகளுள் ஒன்றான தமிழ் மொழிக்கு எழுத்து, சொல், பொருள், யாப்பு ,அணி என்று ஐந்து இலக்கணங்கள் உண்டு. மொழியை ஊடகமாகக் கொண்டு பேசுவோரும், எழுதுவோரும் தாம் எடுத்துக் கொண்ட கருத்தை இலகுவாகவும், தெளிவாகவும் புரிய வைப்பதற்கு அணிகளை பயன்படுத்துவர். புலவர்கள், கவிஞர்கள், பண்டிதர்கள்,எழுத்தாளர்கள் ஆகியோரும் "ஏடறியேன் எழுத்தறியேன் எழுத்து வகை நானறியேன் பாடறியேன் படிப்பறியேன் பள்ளிக்கூடம் தானறியேன்" என்று கூறும் பாமரரும் அணிகளை இலாவகமாக கையாளுகின்றனர். அணியப்படுவதால் 'அணி' என்றும் 'அணிகலன்' என்றும் அலங்காரம் செய்வதால் – 'அலங்காரம்' என்றும் இதனைக் குறிப்பிடுவர். அளவோடு நகைப்பது அழகாகும். நகைகளையும் அளவோடு அணிந்தால் அழகுதான். அளவுக்கு மீறினால் அலங்கோலமாகி விடும். துரியோதனனைப் பார்த்து துரோபதை நகைத்ததால் பாரதப் போருக்கு அது வித்திட்டது.அழகுக்கு இட்டால் ஆபத்துக்கு உதவும். அழகாக இருப்பதற்கு அணிகின்ற அணிகலன்கள் ஆபத்தான வேளையில் அடைவு வைக்க உதவும்

என்பது ஒரு கருத்து. அழகுக்காக அணியப்படும் அணிகலன்களால் ஆபத்து வரும் என்பதும் ஒரு சாராரின் கருத்து. மொழியில் பயன்படுத்தப்படும் அணிகள் அழகும் சுவையும் ஊட்டுவனவாகும்.

தமிழ் மொழியில் அணியிலக்கணம் என்ற தனிப்பிரிவுண்டு. தண்டி என்ற ஆசிரியரால் தண்டி அலங்காரம் என்ற அணியிலக்கண நூல் இயற்றப்பட்டுள்ளது. அந்த நூலில் பொருளனி, சொல்லணி என்ற இரு பிரிவுகள் உள. இந்த நூலில் பொருளணிகள் என்ற தலையங்கத்தில் "தன்மை யுவமை உருவகந் தீவகம் - பின்வரு நிலையே முன்ன விலக்கே" - என்ற சூத்திரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட அணிகளின் பெயர்கள் சுட்டிக் கூறப்பட்டுள்ளன. தன்மையணி (04) உவமையணி (08) உருவகவணி (15) தீபகவணி (12) வேற்றுப் பொருள்வைப்பணி (08) ஒட்டணி (04) தற்குறிப்பேற்றவணி (02) சிலேடையணி (02) பின்வரு நிலையணி (02) என்று பல்வேறு அணிகள் பற்றிய விளக்கமும் உதாரணங்களும் காட்டப்பட்டுள்ளன. பழந்தமிழ் இலக்கியங்களில் பயின்றுள்ள அணிகளை இனங்கண்டு சுவைப்பதற்கு அந்நூல் உதவும். விசாகப் பெருமாள் ஐயர் என்பவர் இயற்றிய அணியிலக்கணம் என்ற நூலில் சுமார் நூறு அணிகளை இனங்கண்டு பெயரிட்டுள்ளார். தமது வித்துவச் செருக்கை வெளிக்காட்டும் வகையில் இடக்குமுடக்கான பாடல்களைப் பாடி திக்குமுக்காட வைப்பது சிலரது பண்பு. அணிகளை அளவுக்கு மீறி பயன்படுத்தினால் அசிங்கமும் அலங்கோலமுமாக்கிவிடும். உப்புக் கூடி சுவை கெட்டது போல அணிகளின் அதிகரிப்பு வெறுப்பை உண்டாக்கிவிடும். இக்காலத்தில் அணிகளுள் அநேகமானவை கையாளப்படுவதில்லை; கண்டுகொள்ளப்படுவதில்லை. இக்காலத்தில் பெருமளவு கையாளப்படுகின்ற அணிகள் பற்றி சுருக்கமாக அறிந்து கொள்வது பயனுள்ளதாகும். பரீட்சைகளில் அணிகளை இனங்கண்டு பெயரிடவும் அவைபற்றி விளக்கம் கூறவும் அவசியம் ஏற்படுகின்றது. பல்லால் கிழிக்கின்ற பனங்கிழங்கை ஆப்பு வைத்து அடித்து பிளப்பது போல் சிரமப்படுகின்ற சிலரும் உளர். அறியாதவன் பூசை விடிய விடிய என்பது போல அணிகளை குழப்பி மயக்கம் ஏற்படுத்துவோரும் சிலர் உளர். இக்காலத்தில் பெருவழக்காக கையாளப்படுகின்ற உவமையணி, உருவகஅணி, தற்குறிப்பேற்றவணி, இல் பொருள் உவமையணி, சிலேடையணி, உயர்வுநவிற்சியணி, ஒட்டணி, பின்வருநிலையணி, உள்ளுறையுவமம் ஆகிய ஒன்பது அணிகளை உதாரணங்களோடு விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம். இனிவரும் மூன்று தொடர் கட்டுரைகளில் மும்மூன்று அணிகளை விளக்குவோம்.

(தொடரும்)

# தென்றலின் தேடல்

-க.கிருபாகரன்-



## கோவிலூர் செல்வராஜன்

ஒரு ஊடகவியலாளனாக- ஒலிபரப்பாளனாக- எழுத்தாளனாக- கவிஞனாக- பாடலாசிரியனாக- சஞ்சிகை ஆசிரியனாக- நடிகனாக- இசையமைப் பாளனாக- ப ாடகனாக.. எனப் பல ப ரிமாணங்களில் தன்னைப் பதிவு செய்து கொண்டு, உலகளாவிய ரீதியில் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட எமது மண்ணின் மைந்தன் கோவிலூர் செல்வராஜனைத் **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"** பேருவகையடைகிறது.

இவர் திருக்கோவிலைப் பிறப்பிடமாகவும்- நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்டு கலைப்பணியாற்றி வருகிறார்.

## பாடசாலைக் காலம்

தனது ஆரம்பக் கல்வியை திருக்கோவில் மெதடிஸ்தமிஷன் பாடசாலையிலும் - பின்பு க. பெ ா.த (சா.தரம்) வரை தம்பிலுவில் மகாவித்தியாலயத்திலும் கற்றார். அத்தோடு உயர் கல்வியை மட்டக்களப்பிலும் படித்துச் சித்தியடைந்தார்.

## கலைத்துறை ஈடுபாடு

எழுபதாம் ஆண்டு கொழும்பு மெய்கண்டான் நிறுவனத்தின் **"நட்கதிரமாமா", "கலாவல்லி"** ஆகிய இரண்டு சஞ்சிகைகளிலும் உதவி ஆசிரி யராகத் தனது கலைப்பயணத்தைத் தொடங்கினார். அப்பெ ாழுது இலங்கையின் பி ரதமராக இருந்த திருமதி சிறிமாவோ பண்டாறுநாயக்கா தமிழ்ந ாட்டுப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ய ாவற்றிற்கும் தடை விதித்திருந் தார். அதனால் ஈழத்துச் சஞ்சிகைகளுக்கு எழுச்சியும்- வளர்ச்சியும் கிடைத்தது.

இதன்காரணமாக இவ ர் ஆசிரியராக இருந்த சஞ்சிகைகள் அமோக வரவேற்புடன் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் விற்பனைய ாகின. இக்காலப் பகுதியில் தனதுகல்வித் தரத்தை உயர்த்தும் பொருட்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாகப் பதிவு செய்து கொண்டு தமிழ் பொருளாதாரம், அரசியல் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் படித்துத் தேறினார்.

இலங்கையின் ஆற்றல் மிக்க – மூத்த படைப்பாளிகள் பலரை எமது இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். ஈழத்து இலக்கிய, இசைத் துறைக்கு பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு கொண்டு வரும் வகையிலேயே "**தென்றலின் தேடல்**" எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## இசைத்துறை ஈடுபாடு

எழுபதுகளில் ஈழத்துப் **"பொப் பிசை"** வளர்ச்சி பெற்ற காலமாகும். இவரது மைத்துனரான இரா.தெய்வநாயகத்தின் உந்துதலாலும், வழிநடத்தலாலும் மட்டுநகர்- **"ஜெயாலயா"** இசைக்குழுவில் பாடகராகவும், தொகுப்பாளராகவும் தேர்ச்சி பெற்றார். அமரர் எருவில் மூர்த்தியின் பாடல்களை தெய்வராஜனும், இவரும் சேர்ந்துபாடி பின்பு இலங்கை வானொலிவரைக்கும் எடுத்துச் சென்றார்கள்.

அத்தோடு கொழும்பு **"சிவா என்டேடைமென்ட்"** தயாரித்து வழங்கிய பொப்பிசை நிகழ்ச்சிகளில் மறைந்த பிரபல அறிவிப்பாளர் கே.எஸ். ராஜாவுடன் சேர்ந்து தன்னை அறிவிப்பாளராகவும் உருவாக்கிக் கொண்டார்.



இவற்றோடு இலங்கையில் தயாரித்து வெளிவந்த **"நான் உங்கள் தோழன்", "பாதை மாறிய பருவங்கள்"** ஆகிய திரைப்படங்களிலும் இவர் நடித்தும், பங்களிப்பும் செய்திருந்தார். மறைந்த திருக்கோவில் கண்ணன் முதலாளியின் அனுசரணையுடன் தம்பிலுவில் மகாவித்தியாலய மைதானத்தில் இவர் நடத்திய **" சுவீட்நைட்"** என்ற கதம்ப நிகழ்ச்சி எமது பகுதிமக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,மற்றும் தேசிய தொலைக் காட்சியான ரூபவாஹினியிலும் இவரது பாடல்களும், படைப்புக்களும் வெளிவந்து இவரை நாடறிந்த கலைஞனாக உருவாக்க உதவின.

இவரின் **"தேசத்தின் தென்றல்"** என்ற தாயக உணர்வுப் பாடல்களும் கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இயங்கும் தமிழ் வானொலிகளில் ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. 1997இல் இவர் படைப்பாக வெளியான **"விடியாத இரவுகள்"** என்ற சிறுகதைத் தொகுப்புக்கு தமிழ்நாடு தழுவிய போட்டியில் "**லில்லி தேவ சிகாமணி**" இலக்கியப் பரிசு கிடைத்தது.

நோர்வேயில் "**தமிழ்நாதம்**" வானொலியில் பணிபுரிந்தபோது- இவரின் "**புதுக்கோலங்கள்**" மெல்லிசைப் பாடல்கள் தொகுப்பும், "**மண்வாசம்**" கவிதைத் தொகுப்பும் வெளியாகின.





2012 ஆகஸ்ட் மாதம் இவரும், இரா.தேவராஜனும் பாடிய **"ஆடிஅமாவாசை"** பாடல் இறுவ ட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

இவ்வாறாக - நாட்டிலும் - நாடுகடந்தும் இவர் ஆற்றிவரும் பங்களிப்பைத் **"தென்றல்"** மீண்டும் - மீண்டும் மனதார வாழ்த்துகிறது!

-வெலிகம றிம்ஸா முஹம்மத்-

# தொடரும் தொல்லைகள்!!!

வலைவீசிக் கஸ்டப்பட்டும்
வருமானத்தைக் காணோம்!!!
விலைவாசி ஏற்றத்தால் -நாம்
வலியிழந்து போனோம்!!!

❋❋❋❋

எங்கள் அடுப்புக்கள்தான்
எரியவில்லை — ஆனால்
வயிறெரிகிறது
பசியாலும், ஆத்திரத்தாலும்!!!

❋❋❋❋

கவலைப்படாதீர்கள்
என்று சொல்லப் பலருண்டு - எனினும்
வழிவகையைக்
காட்டித் தருவோர் எவருண்டு?

❋❋❋❋

பகலில் நிகழும் திருட்டுக்கள்
ஒழிக்கப்படுகின்றன!!!
இரவில் நிகழும் திருட்டுக்கள்
அழிக்கப்படுகின்றன!!!

❋❋❋❋

இரத்தத்தை உறிஞ்சுவது
அட்டைகள் மாத்திரமல்ல..
அட்டையர்களாய்
பலரிருக்கின்றனர்!!!

❋❋❋❋

நாங்கள் மனிதர்கள்
தோளேறி சவாரி செய்ய
கழுதைகளல்லர்!!!

❋❋❋❋


சுனாமி ..
கிறிஸ் மனிதன்
எதுவும் தேவையில்லை........
எமை விழ்த்த இந்த
விலைவாசி ஒன்றே போதும்!!!

❋❋❋❋

1

# கதிர்காமம் சமாது மடப்பட்டயம்

கலாபூஷணம். க.தங்கேஸ்வரி(பி.ஏ)தொல்பொருளியல் சிறப்பு



கதிர்காமத் தலத்தில் மன்னன் இராஜசிங்கன் காலத்தில் கல்யாண மண்டபமும், ஹோம குண்டமும் கல்யாணகிரி சுவாமி யாரால் அமைக்கப்பட்டது. சுவாமி சந்நிதானத்துடன் உள்ளது கல்யாண மண்டபம். கல்யாண சுவாமி – முத்துலிங்க சுவாமி என்ற பெயருடன் சமாதி அடைந்த போது - அவரைச் சமாதி வைத்துக் கட்டப்பட்டதே முத்துலிங்க சுவாமிக் கோயில். இது சமாதி மடம் எனப்பட்டது. இங்கு இவருக்குப் பின்னர் சமாதியடைந்த ஏனைய சுவாமிகளின் சமாதிகளும் உள்ளன.

வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் அவர்களது நெருக்கடிகளால் பல இடங்களில் இந்துக்கள் நிலை குலைந்ததும், பல இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டதும் வரலாற்று உண்மை. இதனால் நிலைகுலைந்த கதிர்காம சுவாமி கோயில் பூசகர் குடும்பம், பல முதலி மார்கள், செட்டிமார்கள் ஒளிந்து கொழும்புக்கு ஓடி வந்தனர். இத்தகவலை பட்டயம் ஒன்று கூறுகிறது.

கொழும்புக்கு ஓடி வந்த பழனி அய்யனார், கயில முதலியார், நல்லதம்பி முதலியார், பணவண்ணக்கர், நாடு வெள்ளாளச் செட்டிகள் போன்ற பலருக்கு தத்தம் பண்ணிக் கொடுத்தது பற்றிய விபரம் இப்பட்டயத்தில் கூறப்பட்டுள்ளது. சுமார் 12 அங்குல நீளமும்,9 அங்குல அகமும் கொண்ட இச்செப்புப் பட்டயம்- முன்புறம் சூரிய, சந்திரர், வேல் சின்னங்களுடன் பிள்ளையார், முருகன்,

வள்ளி , தெய்வ ானை, மாணிக்ககங்கை, நவநாயகர்களின் படங்கள் கீறிட்ட நிலையில் காணப்படுகிறது. முன்புறம் 18 வரிகளும், பின்புறம் 37 வரிகளும் காணப்படுகின்றன. இச் செப்புப் ப ட்டயம் 1731 ஆம் ஆண்டு எழுதப்ப ட்டுள்ளது.

இப்பட்டயம் எழுத ஏதுவாய் அமைந்த நிலை, இதில் கூறப்பட்டுள்ள வி டயங்கள், சாட்சிகள் என்பன பற்றிய விபரங்களைப் பார்ப்பதற்கு முன்னர் கதிர்காம ஸ்தலத்தின் வரலாறு , மடங்கள் எழுப்பப்பெற்ற வரலாறு , மடத்திலே தொண்டு செய்த சித்தர்கள் பற்றியவிபரத்தை முதலில் அறிவது பொருத்தமானது. முதலில் கதிர்காமப் பதியின் தொன்மையையும், புராணங்கள் கூறும் கதிர்காமப் பதியின் சிறப்பையும் சுருக்கமாகப் ப ார்ப்பது அவசியமானது.

## கதிர்காமத்தில் பண்டைய பூசகர்

வெள்ளைக்காரரின் ஆட்சிக்காலத்தின் பே ாது , அங்கு பூசகர்களாக பிராமணர்கள் இருந்துள்ளனர் என்பது இப்பட்டயம் மூலம் தெரிகிறது. பழனி அய்யர் என்ற பூசகர் அவருடன் கயிலை முதலியார், நல்லதம்பி முதலியார் பே ான்றோரும் செட்டிகள் பரம்பரையினர், வெள்ளாளர்கள், இஸ்லாமியர்கள் போன்றபலரும் கதிர்காம ஸ்தலத்தில் இருந்துள்ளனர். பழனி அய்யர் பரம்பரையில் ஒருவர் அக்கரைப்பற்றுப்பகுதிக்கு வந்துள்ளார். அவர் சிங்களப் பெண் ஒருவரைத் திருமணம் செய்ய வேண்டிய நிலையேற்பட்டது எனவும், அதில் வந்த பரம்பரையினர் இன்றும் வ ாழ்வதாகவும் அறிய முடிகிறது.

இவ் அய்யர் பரம்பரையினர் தாம் சாசிபர் முனிபர் பரம்பரை எனவும், தெசாமுகர்கள் எனவும் கூறிக்கொள்வர். இக்காலத்தில் வீரசைவக் குருக்கள் பரம்பரையினருடனும், தம்பட்டர் எனப்படும் பிராமணர்களுடனும் கலந்துள்ளதாகவும் அறிய முடிகிறது. காசிப கோத்திர சிவப்பிராமணர்என்பதே தமது மூலம் எனவும் கூறுவர். சிங்களப் பெண்ணை மணந்த பிராமணர் இறந்த போது, அவரது மகன் மந்திரம் தெரியாமையால் வாய் கட்டிப்பூசை செய்ததாகவும், அதுவே கப்புறாளைப் பூசைய ாகிறது எனவும் கூறப்படுகிறது. இவ்வழி வந்த ஒருவரிடமே இந்தச் சமாது மடப்பட்டயம் முத்துலிங்கசுவாமி யால் எழுதப்பட்ட தங்கத்தகடு, தங்கத்திருமுகம் என்பன இருந்துள்ளன. இன்று அவை மறைக்கப்பட்டு விட்டன. தற்போது இவ்வம்சாவழி வந்த ஒரு குடும்பத்தினர் மட்டக்களப்பில் உள்ளனர்.

ஆகவே சமாது மடப் ப ட்டயம் பற்றிய விளக்கத்துக்கு முன்னர் கதிர்காமப் பதியின் தோற்றம், சிறப்பு, கதிர்காம ஸ்தலம் பற்றிப் புராணங்கள் கூறும் வி டயம் என்பவற்றைப் பார்க்கலாம். பின்னர் இம்மடங்கள் உருவாகிய விதம், அம்மடங்களை நிர்வகித்த சந்நியாசிகள் விபரத்தை அறிந்த பின் சமாது ப ட்டய விளக்கத்தைப் ப ார்க்கலாம்.

## கதிர்காமமும், புராண இதிகாசங்களும்

வடமொழி ஸ்கந்தப் புராணத்தின் ஒரு பகுதி எனக் கருதப்படும் தக்ஷிணகைலாயப் மான்மியத்தில் கதிர்காமக் கிரிக்கு **"ஜோதில்காமகிரி"** என்னும் பெயர் சொல்லப்படுகிறது. சப்பிரகமுவா மாகாணத்தில் **"சபரர் கம"** அதாவது சபரர் கிராமம் எனப்படுமிடத்தில் அமையப் பெற்றது கதிர்காமத் தலம்.

**"................மணிமலைச் சாரல்**
**அடக்கருஞ் சீறுார் அரணக உறையுளர்**
**காட்டுயிர் காணார் கைப் பயில் குறியொடு**
**வேட்டன செய்யும் வேட்டு வினைக் கருத்தொழிற்**
**சுவர்கணை வாழ்க்கைச் சவரர் புளிஞர்"**

என உதயணன் கதை வரிகள் காட்டுகின்றன.

கந்தபுராணத்தில் வள்ளியம்மை திருமணப் படலத்தில் **"வெள்ளியங் கிரியின் ஒருசார் விளங்கிய கந்தவெற்பு"** எனக் கூறப்பட்டுள்ளது. அசுர மன்னனான சூரபத்மனது இராஜதானிய ாகிய மகேந்திரபுரி இலங்கைக்குத் தெற்கே கடலுக்கடியில் உள்ளது என்பது ஆய்வுகள் கா ட்டும். இராவணேசனது இலங்காபுரி நகரும் இலங்கையின் பெரும் பாகமும் கடல் கொள்ளப்பட்டது எனவும் அறிய முடிகிறது. இன்றைய களுத்துறை நகரும் **" பண்டு வேலர் புரம்"** என்னும் பெயரால் வழங்கப்பட்டது. காலு கங்கையின் (களுகங்கை) வடபுறம் உள்ள பிரதேசம் பண்டு **"தேசேத்திர"** (களுத்துறை) என வழங்கியது. தேசேத்திர என்பது தேவ சத்துருக்கர் அதாவது கதிரை வேலவனுக்கு பகையுள்ளவர்கள் வசிக்குமி டமாகும். முருகக்கடவுள் சிரவுஞ்சி கிரியையும் தாருகனையும் வேற்படையால் அழித்த பின்னர் தேவகிரிக்குச் சென்று திருசேய்ஞவூர், திருச்செந்தூர் தலங்கள் சென்று வீரப ாடுதேவர் சைனியங்கள் புடைசூழப் புறப்ப ட்டு- கதிர்காமக் கிரியையை அடைந்தார்.

(தொடரும்..)




-கோவிலூர் செல்வராஜன்- (நோர்வே)

பாடும் மீன் வ ாழும் எங்கள் வ ாவியம்மா...
மட்டுநகர் எங்கள் அன்னை பூமியம்மா - கவி
பாடும் மக்கள் வாழுகின்ற தேசமம்மா - நாங்க
பேசும் தமி ழ் மணக்கும் நல்ல வாசமம்மா....

கூத்து, கும்மி, வசந்தன், கோலாட்டமம்மா - நாங்க
பார்த்துப் போற்றி வளர்த்து விட்ட கலைகளம்மா...
தேனும், பாலும், தயிரும் நன்கு கிடைக்குமம்மா - புள்ளி
மானும், மயிலும், குயிலும் இங்கு வாழுதம்மா......
காடும், மேடும், களனி என்று ஆனதம்மா - உழவர்
பாடும் பாட்டு காற்றினிலே தவழுமம்மா...
ஆறும், நதியும், வயலும் இங்கு இருக்குதம்மா...
சோற்றுப் பஞ்சம் எங்களுக்கு இல்லையம்மா...

கடற்காற்று கரையை நோக்கி வீசுமம்மா –நீலக்
கடலினிலே படகு மெல்ல ஓடுமம்மா.....
வயற்காட்டில் பொலிப்பாட்டுக் கேட்குமம்மா....
அதைக் கேட்டு மக்கள் மனம் மகிழுமம்மா....

முத்தமிழும் வாழுகின்ற பூமியம்மா –அந்த
வித்தக விபுலானந்தன் தேசமம்மா.....
சித்தர்களும் வாழ்ந்திருந்த ஊர்களம்மா –அவர்
தத்துவங்கள் இன்னும் இங்கு வாழுதம்மா.......

09/

# மாணவர்களே! சிறுகதை எழுதுவோம் வாருங்கள்!

- பேராசிரியர். செ.யோகராசா -

சிறுகதைக்குரிய வ டிவ உ ருவ ாக்கம் என்பது- தமி ழில் சிறுகதை தோற்றம் பெற்ற காலத்தில், **"ஆரம்பம்- படிப்படியான வளர்ச்சி – (எதிர்பாராத) முடிவு"** என்ற விதத்திலேயே அமைந்திருந்தது. அதனை **"நேர்கோட்டு உருவாக்கம்"** என்று குறிப்பிட்டனர்.

பின்னர் சென்ற நூற்றாண்டின் - எண்பதுகளிலிருந்து சிறுகதை உருவமும், அதன் ஏனைய பண்புகளும் மாற்றங் கண்டன. பின் நவீனத்துவ இலக்கியச் சிந்தனையின் செல்வாக்கினால்- உலகச்சிறுகதைப் போக்கிலேற் பட்ட மாற்றங்களைத் தமிழ்ச் சிறுகதையும் உள்வாங்கிக் கொண்டமையே அதற்கான காரணமெனலாம்.

மேற்குறிப்பிட்ட வடிவ மாற்றங்களுள் முதன்மையானது சிறுகதையின் வடிவம், திரிபிற்கு- சிதைவிற்கு உள்ளானமையாகும். இதனை **"அநேர்க் கோட்டு மாற்றம்"** என்பர். அதாவது சிறுகதையின் ஆரம்பம் எவ்வாறும் அமையலாம்; அது எவ்வாறும் வளர்த்தெடுக்கப்படலாம்; அது எவ்வ ாறும் முடிவு பெறலாம்.

சிறுகதையின் ஆரம்பத்திலோ, இடையிலோ, முடிவிலோ வரைபடங்கள் அமையலாம்; சோதி டக்குறிப்பு வ டிவரீதி யில் இடம்பெறலாம்.

முன்னைய சிறுகதைகளிலே நீதிபதி யின் தீர்ப்பு ஆசிரியரின் கூற்றாக அமையுமெனில், தற்போது உண்மையான தீர்ப்பின் பிரதி இடம்பெறவும் இயலும்.

சிறுகதை மாந்தர்கள் மிருகங்களுடன் உரையாடலாம். ஒரு மனித உறுப்பினை (முகம், பல், மூக்கு) முதன்மைப்படுத்தி சிறுகதை வளர்த்தெடுக் கப்படலாம்.

சிறுகதைக்குரிய **"காலம்"** இதுதான் என்று அமைய வேண்டியதில்லை. **"இடம்/களம்"** இதுதான் என்று வரையறுக்க வேண்டியதில்லை. அவை தெளிவற்ற விதத்தில்- கலப்பான விதத்தில் அமையலாம்.

சிறுகதை உருவ மானது ப ரீட்சை வினாத்தாள் பே ாலவும் அமையலாம்.

உதாரணம்:- முழுப்பதிப்புரிமையுடையது.

All rights reserved

இலங்கைப் ப ரீட்சைத் திணைக்களம்

Department of Examinations

நிர்வாகசேவைப் பொதுத்தேர்வு

மாதிரி வினாத்தாள்

அரசியல் விஞ்ஞானம் (1)

சாக்கோவின் சிந்தனைகள்

பகுதி :- 01 நேரம்:- மூன்று மணி

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றுள் சாக்கோவின் சிந்தனைக் கைநூல் பற்றிய மிகப் பொருத்தமான கூற்று எது?

அ) சாக்கோவின் சிந்தனைக் கைநூல் ஒரு மத நூலாகும்.

ஆ) சாக்கோவின் சிந்தனைக் கைநூல் என்பது சிறுவர்களுக்கான ஒரு சித்திரக் கதைப்புத்தகமாகும்.

இ) சாக்கோவின் சிந்தனைக் கைநூல் என்பது-சாக்கோவின் தேர்தல் விஞ்ஞாபனமாகும்.

ஈ) சாக்கோவின் சிந்தனைக் கைநூல் என்பது- சாக்கோ எழுதிய மர்ம நாவல்களுள் ஒன்றாகும்.

உ) சாக்கோவின் சிந்தனைக் கைநூல் என்பது- மேற்கூறிய எதுவுமல்ல.

பாடக்குறிப்பு வடிவத்திலும் இடம்பெறலாம்.

அறிக்கை, கட்டுரை ஆகிய விதங்களிலும் அமையலாம்.

ஒரு பாத்திரத்தினுடனான பேட்டியாகவும் வெளிப்படலாம். பாத்திரம் ஓர் எழுத்தாளன் என்று கருதின் அவனது படைப்புக்கள் பற்றிய அறிமுகங்களாக உருவாகலாம். அவன் எழுதிய தகவல்களின் சுருக்கமாகத் திகழலாம். சஞ்சிகைக்கு எழுதும் ஆசிரியர் கடிதமாக விளங்கலாம்.

ஆனால், இங்கு மனங்கொள்ள வேண்டிய முக்கிய விடயம் யாதெனில் - அவ்வாறான உருவ மாற்றங்கள் ஏதோவொரு நோக்கத்துடன் இடம்பெற்றிருக்க வேண்டும். சிறுகதையின் நோக்கத்திற்கும், அதற்கும் தவிர்க்கவியலாத பிணைப்பு இருக்க வேண்டும் என்பதுதான்!

ஆயினும், சிறுகதை எழுதுகின்ற ஆரம்ப நிலையில்- மேற்கூறிய வழியில் செல்லாமல்- **"முதிர்ந்த"** நிலையில் அவ்வழிச் செல்வதே பயனுடையது!

ஈழத்தில் மேற்கூறிய இயல்புகள் கொண்ட சிறுகதைகள் எழுதுபவர்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் திசேரா, மலர்ச்செல்வன் ஆகியோரும்- அம்பாறை மாவட்டத்தில் **"அம்ரிதா ஏயெம்"** என்பவரும்- யாழ்ப்பாண மாவட்டத்திலே இராகவன், இ.சு.முரளிதரன், மெலிஞ்சி முத்தன் முதலானோரும் காணப்படுகின்றனர். ஆர்வலர்கள் இவர்களது சிறு கதைகளைப் படிப்பதனூடாக மேற்குறிப்பிட்ட விடயங்களை விளங்கிக் கொள்ளவியலும்!

(முற்றும்)

## –நீத்தார் நினைவு–

# "கல்வியியலாளர் சம்சுத்தீனின் இழப்பு! கல்விச் சமூகத்துக்கு பேரிழப்பு!!!

-பழுவூரான்-



அட்டாளைச்சேனையின் முதல் விஞ்ஞானப் பட்டதாரியான அல்ஹாஜ் எம்.ஏ.சம்சுத்தீன் அண்மையில் காலமானார்.

தனது திறமைய ான கற்றல் பேறு காரணமாக- ஆங்கில ஆசிரியராக நியமனம்பெற்று, சிறிதுகாலம் சேவை யாற்றியதன் பின்னர் இந்தியாவுக்குச் சென்று அங்கு விஞ்ஞானத்தில் திறமைசித்தி பெற்று, ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாக வெளியேறினார்.

1961 ஆம் ஆண்டில் விஞ்ஞானப் ப ட்டதாரி ஆசிரியராகத் தனது கல்விப் பணியைத் தொடர்ந்த அன்னார் திறமையின் காரணமாக அ ட்டாளைச்சேனை மத்திய கல்லூரி, ஏறாவூர் அலிகார் மகாவித்தியாலயம் போன்றவற்றில் அதிபராகவும் பணிபுரிந்துள்ளார்.

அத்தோடு பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளராகவும், உதவி அதிபராகவும், அதிபராகவும் சிறப்பான பணியாற்றியுள்ளார். பின்னர் தனது ஊரில் கடமையாற்ற வேண்டும் என்ற நோக்கோடு அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கலாசாலை அதிபராக உயரிய சேவையாற்றியுள்ளார்.

இவற்றோடு மட்டக்களப்புப் பிராந்திய பிரதம கல்வி அதிகாரியாகவும், மேலதிக கல்விப் பணிப்ப ாளராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

இவ்வாறாகத் தனது வ ாழ்வின் பெரும் பகுதியை கல்வித் துறைக்காக அர்ப்பணித்த அமரர் எம்.ஏ.சம்சுத்தீனுக்குத் "**தென்றல்**" தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

# கலைகளுக்கெல்லாம் அரசு கவிதை

09

- ஆ.மு.சி.வேலழகன் -

இவ் ஒன்பதாவது தொடரிலும் **"மோனைத் தொடை"** பற்றியே நோக்குவோம். அதற்கு முன்-பறவைகள், விலங்குகள் முதலான உயிர்களிடத்திலே இயல்பாக-இயற்கையாகவுள்ள குணவியல்புகளை **"கம்பன்"** காட்சிப் படுத்துவதை சற்றுப் பார்த்து விட்டு-மோனைத்தொடைக்கு வருவோம்.

சிப்பிகள் நீர்த்துறைகளில் நிம்மதியாக நித்திரை செய்ய வேண்டுமென்பதனால், ஆமைகள் நீர்த்துறையிலே சென்று சிப்பிகளைக் குழப்பாமல், காட்டுப் புதர்களிலே சென்று நித்திரை செய்கின்றனவாம். நீர்த்துறையிலும், நிலப்பரப்புகளிலும் வாழும் இயல்பு கொண்ட ஆமை நீர்த்துறையில் மட்டும் வ ாழும் இயல்புடைய சிப்பிக்கு நீர்த்துறையை வி ட்டுக் கொடுத்ததுபோல், அன்னப்பறவைகள் வைக்கோல் போரிலே நிம்மதியாக உறங்க வேண்டுமென்பதால் மயில்கள் வைக்கோல் போரிலே உள்ள நெல்லை மட்டும் கொறித்து வி ட்டு, அன்னப் பறவையைக் குழப்ப ாமல், மலர்கள் மலரும் சோலைகளில் உறங்குகின்றன.

இப்ப டி ஒன்றின் நிம்மதியை மற்றொன்று குழப்பாத இனிமையான வாழ்க்கை முறை பறவைகள், விலங்குகளிடத்திலே இருந்தால்- அந்நாட்டு மக்களிடத்தில் எத்தகைய மேன்மையான பண்புகள் இருந்திருக்கும் என்பதைக் காட்சிப்படுத்தும் கவிதையாகக்கீழேயுள்ள கவிதையைத் தந்து சிந்திக்க வைக்கிறார் **"கம்பர்"**.

**இதோ:- "நீரிடை உறங்குஞ் சங்கம்**
**நிழலிடை உறங்கும் மேதி**
**தாரிடை உறங்கும் வண்டு**
**தாமரை உறங்குஞ் செய்யாள்**
**தூரிடை உறங்கும் ஆமை**
**துறையிடை உறங்கும் இப்பி**
**போரிடை உறங்கும் அன்னம்**
**மொழிலிடை உறங்கும் தோகை"**

உறங்கும், உறையும் என்ற சொற்கள் நித்திரை கொள்ளும் என்ற

பொருளினை மட்டுமன்றி – வாழும், கிடக்கும், இருக்கும் என்ற பொருளினையும் இப்பாடல் குறிக்கும்.

எ.கா:- **"அ"** னாவில் ஒரு கவிதை அடியைத் தொடங்கினால் அந்தக் கவிதையில் வரும் சீர்களைப் பொறுத்து ஒவ்வொரு சீரிலும் மோனையாக

1. **"அ, ஆ, ஐ, ஔ"** என்பன வந்தால் அதனை **"வழிமோனை"** என்பர். இதேபோல் :-

**"இன்சொல் இனிதீன்றல் காண்மான் எவன்கொலோ"**

**"இருமை வகை தெரிந்து ஈடறம் பூண்டார்"**

**"எமக்கென்னென்று இட்டுண்டு இரும்"**

**"இருநாளைக்கு ஏலென்றாய் ஏலாய்"**

2. **" இ, ஈ ,** எ, ஏ ஆகிய உயிர்எழுத்துக்களுக்கு **"யகரம்"** மோனையாக வருவதற்குக் கீழ் வரும் எடுத்துக் காட்டைக் கவனிக்கவும்.

**" எண்ணி ஒருகருமம் யார்க்கும் செய் யொண்ணாது"**

**" யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்"**

3. **"உ, ஊ, ஒ, ஓ"** - ஓரடியில் வரும் சீர்களில் இவ்வெழுத்துக்களுள் ஒன்றிற்கு ஒன்று மோனையாய் வரும்.

எ.கா:- **"ஒட்டி உறுவார் உறவு"**

**" ஓடுமீன் ஓட உறு மீன்வருமளவும்"**

**" உழுதுண்டு வாழ்வதற்கு ஒப் பில்லை கண்டீர்"**

**"ஒறுத்தாரை என்செயலாம் ஊரெல்லாம் ஒன்றா"**

எட்டாவது தொடரிலும் - இந்த ஒன்பதாவது தொடரிலும் காட்டிய உதாரணங்களும், செய்யுள் பாடல்களும் வழிமோனையைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய விளக்கங்களாகும். ஏனைய **"உயிர்மெய் எழுத்துக்கு மோனை"** பின்வருமாறு பிரிக்கப்படும்.

01 . இணைமோனை
02. பொழிப்பு மோனை
03. ஒரூ உமோனை
04. கூழைமோனை
05. மேற்கது வாய்மோனை
06. கீழ்க்கது வாய்மோனை
07. முற்று மோனை

ஆகியவற்றின் விளக்கங்களை அடுத்து வரும் தொடர்களில் பார்ப்போம்.

(தொடரும்..)

# காலஞ்சென்ற சிரேஷ்ட ஊடகவியலாளரும், காத்தான்குடி சாலை முகாமையாளருமான ஏ.எல்.பழுலுல்லாவுக்கான கண்ணீர் கவிதாஞ்சலி!!!

## ஊடகம் ஒன்று உறங்கிப் போனது!!!

- காத்தான்குடி- மதியன்பன் -

அர்த்தராத்திரியில்
ஊடகச் செய்தியொன்று
ஊரின் உறக்கத்தை
உசுப்பிவிட்டுச் சென்றது!
அது
ஊடகவியலாளர் பழ்லுல்லாஹ்
உறங்கிவிட்டார் நிரந்தரமாக
என்பதால்...!

ஊடகஉலகத்தில்
எங்களோடு
ஒன்றித்துப் போனவனே!

நீ...முத்தவன்
ஊடகத் துறையில்
உன் அறையில் வளந்தவர்கள்
இன்னும்
ஊடகத் துறையோடு
ஒன்றித்து நிற்கிறார்கள்.
நீமட்டும் இளைப்பாறி
இறைவனிடம் சென்றுவிட்டாய்!!

வெற்றியோதோல்வியோ
நீ
கொண்ட கொள்கை மாறமாட்டாய்
உன் கம்பீரம்
அதை உறுதிப்படுத்தும்!

மரணத்தை நம்புகிறோம்-ஆனால்
செய்தியாளனே செய்தியானபோது
நிமிடங்கள் சில
சிலையாகிப்போனோம்.

யுத்தம்,சுனாமி மற்றும்
இயற்கை
அனர்த்த வேளைகளில்
பழ்லுல்லாஹ் உன்பணி
பாராட்டும் பணியாக நின்றது!!!



தமிழ்- முஸ்லிம் உறவுக்கு
நீ
பாலம் போட்டவன்
எழுத்துப் பணியால்
கோலம் போட்டவன்

பழ்லுல்லாஹ்
நீ
ஊடகத் துறையில் மட்டுமல்ல
சமூகசேவையிலும்
சளைக்காது பணியாற்றியவன்
தன் பிள்ளைகளை
தீனின் பாதைக்கு
காணிக்கையாக்கியவன்

உனதுகம்பீரம்
மேடைப் பேச்சுக்களிலும்
மேனியை சிலிர்க்கவைக்கும்
வைகறையில் வருவாய் நீ
பஸ் டிப்போவுக்கு
நீஓதும் குர்ஆன் ஓசைதான்
அருகில் குடியிருப்போரை
எழுப்பிவிடும் சுபஹுக்கு!!!

# புதிய வரவுகள்



**நூல்** : நானிலம்

சிறப்பு மலர் வெளியீடு - 2012

**நூலின் வகை :** ஏறாவூர்ப் பற்றுக் கலைஞர் விபரத்திரட்டு

**வெளியீடு** : கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், ஏறாவூர்ப்பற்று, செங்கலடி.

இவ்விபரத் திரட்டில் அணிந்துரை, ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்தி, வெளியீட்டுரை போன்றவற்றுடன் ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலக எல்லையினுள் வதியும் முக்கியஸ்தர்களை வகைப்படுத்தி ஆவணமயப்படுத்தியுள்ளனர்.

இவை ஆக்க இலக்கியம், கூத்து, நடனம், இசை, புகைப்படம், ஓவியம், சித்திரம், சிற்பம், கலையும் – கைவினையும், கிராமிய வைத்தியம், ஊடகத்துறை, வாய்மொழிப் பாடல், சோதிடம், தோல்வாத்தியம் எனப் பல்வேறு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

எதிர்கால ஆய்வுக்கு உசாத்துணை நூலாக **"நானிலம்"** அமையுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

---



**நூல்** : இப்படிக்கு இதயம்

**ஆசிரியர்** : இ.சபா

**முகவரி** : ஜம் வெளியீட்டகம், செட்டிபாளையம், மட்டக்களப்பு.

**தொ.இல** : 0773314777

**விலை** : ரூபா 250

இந்நூலில் தனது உள்ளக்கிடக்கைகளை நூலாசிரியர் இலகு தமிழில் வெளிக்கொணர்ந்துள்ளார். கவிதை எழுத ஆர்வமுள்ளவர்களுக்கு இப்படிக்கு இதயம் உசாத்துணை நூலாக அமையுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## படமும் – பதிவும்

- ரவிப்ரியா -



பால் நுகர்வினை அதிகரிக்கும் நோக்குடன் நல்லினப் புல்வளர்ப்பினை ஊக்குவிக்கும் பெ ாருட்டு ஓட்டமாவ டி மாஞ்சோலை பதுரிய ாநகர் அர் ரஹ்மான் குர்ஆன் கலாசாலை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் ஓட்டமாவடி பிரதேச சபைத் தவிசாளர் கே.பி .எஸ். ஹமீட் நல்லினப்புல்லை கால்நடைப் பண்ணையாளர் ஒருவருக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.



மனித அபிவிருத்தித் தாபனம் - ஸ்பீட் அமைப்புடன் இணைந்து நடாத்திய தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் காரைதீவுக் கோட்டத்திலிருந்து தோற்றி 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களைப் ப ாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வில் காரைதீவுப் பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் மாணவி ஒருவருக்கு பதக்கம் அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.



ஏறாவூரில் **"புறநெகும"** திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட இரண்டு வீதிகளை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் ஏறாவூர் நகரபிதா அலிஸாகீர் மௌலானா, மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி . பீ.எம்.ஏ.சாள்ஸ் ஆகியோர் நாடாவை வெட்டி வீதிகளைகளைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.



ஐக்கிய நாடுகள் தினத்தை முன்னிட்டு- **"யுனொப்ஸ்"** ஸ்தாபனம் கல்முனை மாநகர சபையுடன் இணைந்து நடத்திய நகரைச் சுத்திகரிக்கும் வேலைத்திட்டத்தை மாநகர முதல்வர் சிராஜ் மற்றும் **"யுனொப்ஸ்"** செயலாற்று முகாமையாளர் அனாபி சக்ரோ மென்ரோ ஆகியோர் ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.



ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின்கீழ் மட்/ஆரையம்பதி மகாவித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள ஆய்வு கூடத்திற்கான அடிக்கல்லை முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவனேசதுரை.சந்திரகாந்தன் நடுவதனைப் படத்தில் காணலாம்.



அமரர் நல்லையா மாஸ்டரின் நினைவுதினப் போட்டிப் பரிசளிப்பு விழா மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பேராசிரியர் சி.மௌனகுரு வில்லுப்பாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற சிவானந்தா தேசிய பாடசாலைக்கான பரிசிலை மாணவன் ம.புருஷோத்தமனுக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.



மட்டக்களப்பு தாழங்குடா தேசிய கல்வியியல் கல்லூரியில் இடம்பெற்ற ஓவியக் கண்காட்சியை அதிதிகள் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.




இலங்கை வர்த்தக ஒன்றியமும், மட்டக்களப்பு மாவட்ட விவசாய கைத்தொழில் வர்த்தக சம்மேளனமும் இணைந்து தன்னாமுனை மியாமி மண்டபத்தில் நடத்திய கிழக்கு மாகாண சிறு கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட விவசாய , கைத்தொழில் , வர்த்தக சம்மேளனத் தலைவர் வி .றஞ்சிதமூர்த்தி தெரிவு செய்யப்பட்ட முயற்சியாளர் ஒருவருக்கு விருது வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.



கடந்தகால யுத்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட போரதீவுப்பற்று பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை நோக்காகக் கொண்டு **"திவிநெகும"** தேசிய திட்டத்தின் கீழ்த் தெரிவு செய்யப்பட்ட பயனாளி ஒருவருக்கு போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் என்.வில்வரெட்ணம் தையல் இயந்திரத்தைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.



பட்டிப்பளைப் பிரதேச செயலககலாசார விழா கொக்கட்டிச்சோலை கருணா அம்மான் கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட ஐந்து கலைஞர்களைப் படத்தில் காணலாம்.



நாடளாவிய ரீதியில் ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின்கீழ் மட்/அம்பிளாந்துறை கலைமகள் மகாவித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள ஆய்வு கூடத்திற்கான அடிக்கல்லை மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் நடுவதனைப் படத்தில் காணலாம்.




ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலகம் நடாத்திய கலாசார விழா தன்னாமுனை மியானி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலாளர் உ.உதயசிறிதர் வருடாவருடம் வெளியிடப்படும் **"நானிலம்"** நூலின் முதற்பிரதியினை விஸ்வப் பிரம்மஸ்ரீ வை.எஸ்.காந்தன் குருக்களுக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.



பெரியகல்லாறு மெதடிஸ்தமிஷன் பெண்கள் பாடசாலையில் நடைபெற்ற கல்விமூலம் கலாசார ஒன்றுகூடல் நிகழ்வின்போது இடம்பெற்ற பொத்துவில் அல்இர்பான் மகளீர் கல்லூரியினதும், அம்பாறை மடவலந்த மகாவித்தியால யத்தினதும், பெரியகல்லாறு மெதடிஸ்தமிஷன் பெண்கள் பாடசாலையினதும் நடனங்களைப் படங்களில் காணலாம்.



இலக்கியத்திற்கான கி ழக்கு மாகாண முதலமைச்சர் விருது பெற்றவரும், அண் மையில் கலாபூஷணம் விருது பெற்றவருமான பாவணர் அக்கரைப்பாக்கியனுக்கு பெரியகல்லாறு மத்திய கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வின் பே ாது, பாடசாலை அதிப ர் க.நல்லதம்பி பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

கண்டுபிடிப்பு

# சிறுநீரிலிருந்து மின்சாரம் தயாரித்து சாதனை !!!

நைஜீரியவைச் சேர்ந்த மாணவிகள் சிறுநீரிலிருந்து மின்சாரம் தயாரித்து சாதனை படைத்துள்ளனர். உலகம் முழுதும் மின்சாரப் பற்றாக்குறை நிலவுகிறது. ஆபிரிக்க நாடுகளில் பெரும்பாலான பகுதிகளில் மின்சாரம் என்பது எட்டாக்கனியாகவே உள்ளது. இதற்கிடையே, ஆபிரிக்க நாடான நைஜீரியாவை சேர்ந்த மாணவிகள், மூன்று பேர், சிறுநீரிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் தொழில் நுட்பத்தை கண்டு பிடித்துள்ளனர். லகோஸ் நகரில் நடந்த ஆபிரிக்க சிறு முதலீட்டாளர்கள் மாநாட்டில், இந்த மாணவிகள் தங்கள் கண்டுபிடிப்பை விளக்கினர்.



இவர்கள் கண்டுபிடிப்பின் படி, சிறுநீர், நைட்ரஜன், தண்ணீர், ஹைட்ரஜனாக பிரிக்கப்படுகிறது. பின், ஹைட்ரஜன், வடிகட்டப்பட்டு சுத்திகரிக்கப்படுகிறது. பிறகு அது சிலிண்டரில் அடைக்கப்படுகிறது. ஹைட்ரஜன், போராக்ஸ் திரவமாக மாறுகிறது. அதிலிருந்து ஹைட்ரஜன் வாயு தனியாகப் பிரிக்கப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட ஹைட்ரஜன் வாயு,ஜெனரேட்டருக்கு சென்று மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. ஒரு லீட்டர் சிறுநீரைப் பயன்படுத்தி, ஆறு மணி நேரத்திற்குத் தேவையான மின்சாரம் தயாரிக்கமுடியும் என்பதை இந்த மாணவிகள் நிரூபித்துள்ளனர்.




இன்றைய நவீன யுகத்தில் பல்வேறு பரிணாம மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் அம்மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் எம்மை அழகுபடுத்த வேண்டிய தேவையுள்ளது. இந்த விடயத்தைக் கருத்திற் கொண்டு **"தென்றல்"** இவ் இதழில் இருந்து அழகுக்கலை தொடர்பான குறிப்பை எமது வாசகர்களுக்காக வழங்குகிறது. (ஆ+ர்)

- ஆ.தாட்ஷாயினி- Diploma in Beauty Culture - இருதயபுரம்.

## பாதம் பராமரிப்பு



1. சுடுநீரில் உப்பு சேர்த்து களைப்படைந்த கால்களை அதில் அமிழ்த்தி வைப்பதன் மூலம் கால்கள் புத்துணர்வு பெறும்.
2. பகலிலே ஏதாவது **"moisturizer"** கிறீம் பாவிப்பதன் மூலமும், இரவிலே நித்திரைக்குச் செல்வதற்கு முன்பு ஒலிவ் எண்ணெய் பூசுவதன் மூலமும் கால்கள் அழகாகக் காட்சியளிக்கும்.
3. நித்திரைக்குச் செல்வதற்கு முன்பு பெற்றோலியம் ஜெல் பாவித்து பாதங்களை மசாச் செய்வதன் மூலம் பாதவெடிப்பிலிருந்து விரைவிலேயே நிவாரணம் பெறலாம்.
4. பாதத்தில் உள்ள இறந்த கலங்களை நீக்குவதற்கு தயிருடன் வினிகர் சில துளிகள் சேர்த்து பாதங்களில் தேய்த்துப் 10 நிமிடங்களின் பின் கழுவி விடவும்.
5. ஒவ்வொரு நாளும் பாதங்களுக்குக் கற்றாளை ஜெல் பாவிப்பதன் மூலம் பாதங்களில் வரக்கூடிய நோய்களில் இருந்து விடுபடலாம்.
6. மாதத்திற்கொரு தடவை அழகு நிலையம் சென்று பாதத்திற்கான சிகிச்சை முறைகளை மேற்கொள்வதன் மூலம் பாதங்களின் அழகினை மேலும் மெருகூட்டலாம்.

# நாட்டாரியல் ஓர் ஆய்வு

கலாபூசணம் ஆரையூர் அருள்

6

ஜீம் ஜீம்
ஆதம் மலைக்குப் போனாராம்
ஆதம்பாவாவும் போனாராம்
ஆதம்பாதம் கண்டாராம்
ஆகா அற்புதம் என்றாராம்

என்றாராம் என்றாராம். இப் பாடல்களையும் இது போன்ற பிரதேசத்திற்குப் பிரதேசம் கிட்டிப்புள்ளு விளையாடும் போது சிறுவர்கள் ஓசை நயத்துடன் பாடிக்கொண்டு ஓடும்போது மிகவும் இனிமையாகவும், இரம்மியமாகவும் கேட்பதற்கு இனிக்கும்.

## சங்கு விளையாட்டு:-

சிறுவர்கள், சிறுமிகள் சேர்ந்து இவ் விளையாட்டை உறவு முறைகள் சொல்லி தங்கள் கைகளைச் சங்கு வடிவில் பொத்தி ஒவ்வொருவர் கைகள் மேலும் மாறிமாறி வைக்க ஒருவர் மட்டும் ஒருகையை சங்கடுக்கில் வைத்து மறுகையின் ஒரு விரலால் அடுக்கிய சங்கின் கீழிருந்து மேல்நோக்கி, அல்லது மேலிருந்து கீழ் நோக்கி இது யாரு சங்கு இது யாரு சங்கு? என்று கேட்க மற்றவர்கள் இது அம்மா சங்கு , அப்பா சங்கு , அக்கா சங்கு , ......... சங்கு என்று கூற வெட்டவா? தீட்டவா? என்று தலைவர் கேட்க ஒருவர் வெட்டு என்றவுடன் தலைவர் இரண்டாக வெட்ட சிறுவஉகள் தங்களின் கைகளை வாயில் வைத்து சங்கூதுவது போல் ஊ......ஊ......ஊ..... என்று ஊதுவர். இதோ அப்பாடல்

**"இது ஆருசங்கு**
**அம்மா சங்கு**
**இது ஆருசங்கு**
**அப்பா சங்கு**
**இது ஆருசங்கு**
**அண்ணா சங்கு**
**இது ஆருசங்கு**
**அக்கா சங்கு"** என்றும் பாடுவர்.

இதே போன்று கொத்து விளையாட்டு விளையாடும் போதும் பெரிய வட்டமாக அமர்ந்து

**"கொத்திருக்கு கொத்து**

**என்ன கொத்து**

**மாங் கொத்து**

**என்ன மா**

**புளி மா**

**போட்டுத்து போங்க"** என்றும் கிழக்கில் விளையாடுவதும் வட்டமாக தலையில் அமர்ந்து உள்ளங்கையை நிலத்தில் பட வைத்திருப்பர் ஒரு குழந்தை ஆலாப்பற பற என்று கூற மற்றவஉகள் கைகளை உயர்த்தி ஆலா பறப்பது போல் செய்வர். இதோ பாட்டு

**"ஆலாப்பற பற...**

**ஆலாக் குஞ்சு பற பற...**

**கொக்குப் பற பற...**

**கொக்குக் குஞ்சு பற பற...**

**குருவி பற பற...**

**குருவிக் குஞ்சு பற பற..."** என்று பாடி மகிழ்வர். இன்னும் புங்கம் புளியடி விளையாட்டில் ஒரு சிறுவனின் கையில் மண்ணை அள்ளி வைத்து அதனுள் ஒரு அடையாளப் பொருளை வைத்து மற்றொருவர் அவரின் பின் நின்று தன் இரு கைகளாலும் கண்களைப் பொத்தி எவடம் எவடம் என்று வினாவி நடக்க பொத்தப்பட்டவர் புங்கம் புளியடி என்று கூறி நடப்பர்.

**"எவடம் எவடம்**

**புங்கம் புளியடி**

**எவடம் எவடம்**

**புங்கம் புளியடி"** என்று கூறி ஓரிடத்தில் அடையாளப் பொருளுடன் மண்ணை வைக்க, வைத்து அவரை திரும்ப வேறொரு வழியால் கூட்டிச் சென்று கண்களைப் பொத்தியகைகளை யகற்றி அவரை அவ்வடையாளத்தை எடுக்கச் சொல்வர். சில வேளைகளில் அவர் எடுப்பார். இல்லா விட்டால் மற்றவர்களுக்கு வெற்றியென முடிப்பர். இதே போன்று "பாட்டன் குத்து" விளையாட்டுப் பாடி, பூசணிக்காய் அல்லது சுரக்காய் விளையாட்டுப் பாடல்பாடி பூப்பறிக்கப் போகிறோம் பாடல்பாடி பூப்பறிக்கும் விளையாட்டு என்று பல சிறுவர் விளையாட்டுக்களை நாட்டார் பாடல் மூலம் பாடி விளையாடுவர்

**வேடிக்கைப்பாடல் அல்லது நையாண்டிப்பாடல்:-**

கடின உழைப்பினால் களைத்திருக்கும் மானிடர்கள் நகைச்சுவை மூலம் புதுப்பொலிவடைந்து, புத்துணர்ச்சி பெறுவதற்கு இத்தகைய வேடிக்கை அல்லது நகைச்சுவைப்பாடல்கள் வழிவகுக்கின்றது. நாட்டார் பாடல்களில் இத்தகைய வேடிக்கைப் பாடல்கள் எவ்வளவோ வாய்மொழியாக வழிவழியாகப் பாடப்பட்டுள்ளது. அவற்றில் சிலவற்றை எடுத்து ஆய்வுக்குட்படுத்தலாம்.

கணவன், மனைவியிடம் தனக்குரிய கடமைகள் எதுவும் செய்யாமல் என்னடி செய்து கொண்டிருந்தாய் என்று வினாவும் போது அதற்கு மனைவி சொல்லும் பதிலோ "நானொன்றும் சும்மாயிக்கல்ல இந்த இந்த வேலைகளைச் செய்து கொண்டிருந்தேன்" என்று கூறும் பாடல் வேடிக்கையாகவும், நையாண்டித்தனமாகவும் அமைவதை காணலாம்.

**"ஏன்டி குட்டி என்னடி குட்டி என்னாடி செய்தாய்?**
**அம்மியடியில் கும்மியடித்தேன் சும்மாவா இருந்தேன்?**
**ஏன்டி குட்டி என்னடி குட்டி என்னாடி செய்தாய்?**
**ஆட்டுக் குஞ்சுக்கு ஆறுதல் பண்ணினேன் சும்மாவா இருந்தேன்?**
**ஏன்டி குட்டி என்னடி குட்டி என்னாடி செய்தாய்?**
**கோழி முட்டைக்கு மயிர் பிடுங்கினேன் சும்மாவா இருந்தேன்?**
**ஏன்டி குட்டி என்னடி குட்டி என்னாடி செய்தாய்?**
**பாம்புக் குட்டிக்குப் பல்விளக்கினேன் சும்மாவா இருந்தேன்?**

தமக்கு எந்த விதத்திலும் பொருத்தமற்ற ஒரு மாப்பிள்ளையை பலவருடங்கள் வயதுக்கு வந்த பெண்ணுக்கு மணம் முடித்து வைக்க அக்கிராமத்துப் பெண் தனது நிலைமையை மிகச்சிறப்பாகப் பின்வருமாறு கூறுகிறாள்.

**"புத்தியறிஞ்சி**
**பூலோகத்தில் காத்திருந்து**
**வாண்டேங்கா ராத்தா-ஒரு**
**வகுத்து நசல் காரனுக்கு"**

**"வகுத்து நசல் காரன்"** என்பது கிழக்கீழ முஸ்லிம்களின் மண்வளச் சொல்லாகும். போலிப் பணக்காரனாக நடித்து மக்களை ஏமாற்று மொருவனைப் பார்த்து பெண்ணொருத்தி கேலிசெய்யும் பாடல்

**"குடிகுலத்திலுள்ள**
**கொம்பனென்று எண்ணிருந்தேன்**
**தலை சிரைக்கும் கத்தியும்-வெறுஞ்**

சாணையுந்தான் அவண்ட சொத்து"

பிள்ளையில்லாமல் மலடியாக இருக்கும் வயதான ஒரு பெண்ணைப் பார்த்து கருத்தரிப்பதற்கு கைகண்ட மருந்தான வேப்பம் பூப்பொடி திண்டாக் கூட உனக்கு பிள்ளையில்லை என்று கிண்டல் செய்யும் மச்சானின் பாடல்

"விடிய எழும்பி
வேப்பம் பூ பொறக்கி
பொடி இடிச்சி திண்டாலும்-ஒனக்கு
புள்ள இனி இல்லமச்சி

## தொழிற் பாடல்கள்

வேளாண்மைப் பாடல்கள், சூடுபோடும் பாடல், கரைவலைப்பாடல் (அம்பாப்பாடல்), தேயிலைத்தோட்டப்பாடல் என்று செய்கிற தொழில்களைச் கவலையின்றி, அலுப்பின்றி, களைப்பின்றி செய்வதற்கும் தொழில்ரீதியான பாடல்களைத் தொழிலாளர் பாடுவதும், தொழிலின் பெருமைபற்றி மற்றவர் பாடுவதும் உண்டு. ஆனால் தேயிலைத் தோட்ட, இறப்பர் தோட்டத் தொழிலாளர் தங்கள் அவலங்கள், துன்ப துயரங்களை பாடுவது போன்றவை தொழிற் பாடல்களில் அடங்கும்.

வேளாண்மைப் பாடல்களை இராமநாதன் ஏர்ப்பாடல், ஏற்றப்பாடல், நடவுப்பாடல், களைவெட்டும் பாடல், அறுவடைப்பாடல், பொலிப்பாடல்கள் என்று வகைப்படுத்தியுள்ளார் . ஏர் பிடித்து உழும் போது பாடப்படும் ஏர்ப்பாடல், முற்காலத்தில் வயல்கள் எருது மாடுகளைக் கொண்டே உழுது வந்தனர். அப்போது ஓசை நயத்துடன் பின்வருவன போன்ற பாடல்கள் பாடுவர்.

"ஓ ஹ...! ஓ...! ஓ...!
ஓடி நடந்திருங்க கண்டச் செல்வானே
உறுதியுள்ள காலாலே-என்ர
கண்டச் செல்வானே...
சார் பார்த்து நடந்திடணும்-என்ர
கண்டச் செல்வானே-நீங்க
சாரோடு வந்திரனும் -என்ர
கண்டச் செல்வானே..."

என்று தொடரும் பாடலை மர்ஹூம் முகைதீன் வாவா பாடிய பாடலையே கிழக்கீழ முஸ்லிம்கள் பாடுவர்.

உழும்போது மாடுகளின் நடைபற்றியும், விரைவாக நடக்கும் படியும், கலப்பையின் பாரம் பற்றியும் வனியா மட்டக்களப்பு மாவட்டங்களில் பாடும் பாடல்

"சால் எங்கடா சால்
சாகப் போறாயடா பார்
பார், பார், பார்,
ஓல வாலனடா
உழக்கி நடவனடா
வேகம் குறையு மெண்டால்
துவரங் கேட்டியுந்தன்
நெடு முதுகு வகிடு செய்யும்" என்று தொடரும் முதிரம் பட்டி செ.செல்வநாயகத்தின் பாடலைப் பாடுவதைக் கேட்கலாம். நாட்கூலிக்கு ஏற்றமிறைக்கும் ஒருவன் தொழிலின் கொடூரத்தையும் வேலைப்பழுவையும் பின்வருமாறு பாடுகிறான்.

**"பகலிரவாய்ப் பத்தல் இறைத்து**
**பாவிநான் மாயுறேனே**
**பகட்டாக உடுத்த உனக்கு**
**பட்டுச்சீலை வேணுமோடி"** என்று பட்டிக்குடியிருப்பு ந.கார்த்திகேசு பாடிய பாடலையும் பாடுவர். நாற்று நடும்போது (தொட்டம் நடுதல்) பெண்களும், ஆண்களும் நிரையாக நின்று நாற்று நடும் போது தரணிக்குள் நா.கிருஷ்ணபிள்ளை பாடிய பாடலை ஒருவர் பாட, மற்றவர்கள் "தென் தெனா" சொல்வர்.

**"ஆற்றிலே தண்ணீர்**
**ஆசைந்து வருவது போல்**
**ஆதன் பிறகே புள்ளுத்**
**துரந்து வருமாப்போல்-தென் தென**
**சேற்றியிலே வெள்ளம்**
**தெளிந்து வருவது போல்**
**செங்கால் நாரையினம்**
**மேய்ந்து வருவது போல்-தென் தென"**

(தொடரும்)

# வட்டி

சிறுகதை



"என்ன பிள்ள அவசரமாப் போறா" என்று வேகமாக நடந்து சென்ற வேணியை வழி மறித்து அவளின் அவசரத்துக்கான காரணத்தை அறியும் ஆவலுடன் அவதி - அவதியாய்க் கேட்டாள் மலர்.

**"சரசி மாமிய கத்தியால குத்தி கொல செஞ்சி போட்டிருக்காம். ஊரே ஓடுது ; உங்களுக்குத் தெரியாதா?"**

**"என்ன பிள்ள சொல்றா நானும் வாறன் நில்லு"** என்று கூறிக் கொண்டே காலில் செருப்பை அணிந்து தலையை ஒருமுறை குலைத்து முடிந்தப டி ஓட்டமும் - நடையுமாக வேணியுடன் போகிறாள் மலர். பாதையில் நின்று கொண்டிருந்த நானும் அவர்களுடன் சேர்ந்து கொள்கிறேன்.

"சரசின் வீடு அமங்கலத்தின் அடையாளமாய் மாறியிருந்தது . அங்கே பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் மரணவிசாரணை அதிகாரியும் தங்கள் கடமைகளைச் செய்து கொண்டு புகைப்படங்களும் எடுக்கின்றனர்".

அதற்குள்-

"என்ன மாதிரி குத்திருக்கு பாருங்களன்".

"அதுதானே கொஞ்சங்கூட ஈவிரக்கமில்லாம"

"என்னதான் கோபம் இருந்தாலும் - இப் பிடியா குத்தி கொல செய்யிற"

"ஆளில்லாத நேரமா வீட்டுக்குள்ள பூந்து அலுவல முடிச்சிருக்குகள்"

"இந்த மனுசி தட்டத்தனியத்தானா இருக்கிற" என்று அயலில் உட்கார்ந்திருந்தவரிடம் கேட்டேன் நான்.

"ஓம் பிள்ள அதுக்கு ஆக்கள் சரிவ ரா. அம்மா தனிய எண்டு பெடியனுகள் நாலு தரம் ஆள் பிடிச்சி வைச்சானுகள். இந்த மனிசியோட ஆருதான் தங்கும். அஞ்சாறு நாளோட ஓடிருங்கள்"

"என்னதான் சட்டுப் புட்டு என்று ஏசினாலு ம் அவசரத்துக்கு அஞ்சாறு தந்து உதவுற மனுசியெல்லா" "முதலவிட வட்டி பத்து மடங்கு வாங்கினாலும், கேட்டவுடன் இல்லெண்டு சொல்லாம தந்திடுவாவு"

அப்பப்பா இந்த அல்லோல கல்லோலத்திலையும் சனங்கள்ற கதைய என்னால கேட்க முடியல்லப்பா....

கொலைக்கான காரணத்தையும் - கொலையாளியையும் அறியும் ஆவலுடன் வந்திருந்தவர்களிடம் விசாரணைகளை நடத்துகின்றனர் பொலிஸ் அதிகாரிகள்.

அதற்குள் அயலூரில் வேலை செய்யும் சரசியின் மூத்தமகன் ராகுலனும், பல்கலைக்கழகத்தில் பயிலும் இளையவன் முரளியும் வந்து விடுகின்றனர்.

"அம்மா என்னம்மா ஆச்சி"

"ஆரும்மா இந்த வேல பாத்தாங்க"

"நீ மிரிச்ச இடத்தில புல்லு ம் சாகாதேம்மா"

"அப்பாவுமில்லாம எங்கள ஏம்மா தவிக்க விட்டிட்டு போயிட்டா"

"சரசி செத்தாலும் பக்கத்தில இருந்து பாசமாக் கத்த ஒரு பொம்புள பிள்ள இல்ல" என்று ஊருல கதைச்ச கதையெல்லாம் எப்படிப்

பொய்யாயிற்றுப் ப ாருங்க. **" இந்தப் பெடியனுகள் என்ன மாதிரி கத்துறானுகள்"**. என்று விநாயகம் தன் அருகிலிருந்த முத்தையாவிடம் கூற – **"சும்மாயா பெத்து பாலூட்டி வளர்த்த தாயெல்லா"** என்று பதிலளிக்கிறார் நண்பர் முத்தையா.

**"உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூட முடியுமா?"** சும்மா ஒருவர் இறந்தாலே ஆயிரம் கதை பேசும் இந்த உலகில் கொலை செய்யப்ப ட்டு இறந்தால் சொல்லவும் வேண்டுமா? **"பாட்டு வாய்த்தால் கிளவியும் பாடுவாள்"** என்ற மாதிரி ஆகியது சரசின் கதை.

அதற்குள் சரசின் உடல் வைத்தியப் பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. பெட்டி வாங்கும் வேலையிலிருந்து எல்லாவேலைகளையும் உறவினர்கள் செய்து கொண்டிருக்கும் போது, பறையொலியையும் மீறிப்பேரிடியாய் இன்னுமொரு செய்தி வந்து சேர்கிறது.

**"குளத்தோர மருதமரத்தில தூக்கு மாட்டி கந்தையா அண்ணன் செத்துக் கிடக்காராம்"** செய்திகாட்டுத் தீபோல் பரவியது.

மக்கள் மனதில் பெரும் பீதி ஏற்படத் தொடங்கி விட்டது. ஒரே ஊரில் விபரீதமான உயிரிழப்புக்கள். மக்கள் தங்கள் உயிருக்கான உத்தரவ ாதத்தை உறுதிப்படுத்த முனைகின்ற வேளையில் குளக்கரைக்குச் சென்ற பெ ாலிஸ் உத்தியோகஸ்தர்கள் கந்தையாவின் சேட்டுப் பைக்கட்டுக்குள் இருந்து அவரின் கைப்பட எழுதிய கடதாசி ஒன்றைக் கண்டெடுக்கின்றனர்.

ஊர்மக்களுக்கு.................

உங்கள் அனைவரிடமும் நான் முதலில் மன்னிப்புக் கோருகிறேன். சரசின் கொலைக்கு முழுக்காரணமும் நான்தான். என் குடும்பத்தினருக்கு இவ்வி டயம் தொடர்பாக எதுவுமே தெரியாது. அவர்களிடம் தனிப்பட்ட ரீதியில் மன்னிப்புக் கோருகிறேன். என் மூத்த மகளின் திருமணத்திற்காக சரசிடம் வாங்கிய 50000 ரூபாவுக்கு இதுவரை 200000 ரூபாவட்டி மட்டும் கொடுத்து விட்டேன். 3 வருடங்களாக வட்டி கொடுக்காமையால் பிடியாக எழுதிய என் இளைய மகளுக்காக வைத்திருந்த வளவு அவளிடம் அறுதியாகி விட்டது. மனச்சாட்சிப்படி பலமுறை நான் கேட்டும் சரசி என்னிடம் தரமறுத்து விட்டாள். அவளிடம் வ ாக்குவாதம் செய்யச் சென்ற எனக்கு போதையை வி ட ஆத்திரம்

ஏறும்படி சரசி நடந்து கொண்டமையால் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக இக்கொலை நேர்ந்து விட்டது. என்மனச்சாட்சி என்னை உறுத்தியமையால், தற்கொலைக்கான முடிவை எடுத்துக் கொண்டேன். இது என்கைப்பட எழுதிய கடதாசியாகும். மீண்டும் அனைவரிடமும் மன்னிப்புக் கோருகிறேன்.

இப்ப டிக்கு.

T.kanthaiya

செய்தி பரவியவுடன், இரு உடல்களையும் அடக்கம் செய்ய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஒருவ ர் செய்த தவறு , அதுவும் ஒருவ ரின் வறுமையை மையப்படுத்திய சுரண்டல் இன்னொருவரை கொலைய ாளியாக மாற்றும் அளவிற்கு மாறியுள்ளதை எண்ணி மனவேதனையுடன் நான் சரசின் வீ ட்டை வி ட்டு வெளியேறுகிறேன்.

(யாவும் கற்பனை)

## கூப்பன் இல-02

முழுப்பெயர் :- ........................................................................

முகவரி :- ........................................................................

........................................................................

இவ்விதம் வெளிவரும் கூப்பன்களை சேகரித்து வையுங்கள்.

25ஆவது இதழ் வெளிவருகையில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் மூவருக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

# இவ்வாண்டு[2012] இல்
## கலாபூஷணம் விருது பெற்ற "தென்றலின்" முத்தான கலைஞர்கள் !!!
## இவர்களைத் "தென்றல்" வாழ்த்துகிறது !!!



இ.கோபாலபிள்ளை- **"தென்றல்"** ஆசிரியர் பீட உறுப்பினர். மட்டக்களப்பு தேற்றாத்தீவைச் சேர்ந்த கலைஞர். இவர் ஓய்வு பெற்ற அதிபரும், மண்முனை தென் எருவில் பற்றுக் கலைஞர் ஒன்றியச் செயலாளருமாவார்.




க.தங்கேஸ்வரி – **"தென்றல்"** இன் முதுபெரும் எழுத்தாளர். மட்டக்களப்பு கன்னன்குடாவைச் சேர்ந்த தொல்லியல் ஆய்வாளர். இவர் ஓய்வு பெற்ற மாவட்டக் கலாசார உத்தியோகஸ்தரும், முன்னாள் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமாவார்.



செ.எதிர்மன்னசிங்கம் - **"தென்றல்"** இன் முதுபெரும் எழுத்தாளர். மட்டக்களப்பைச் சேர்ந்த நாடக, இலக்கிய ஆய்வாளர். இவர் முன்னாள் கிழக்கு மாகாணக் கலாசார உதவிப் பணிப்பாளராகக் கடமைய ாற்றியவர்.



செ.துரையப்பா –**"தென்றல்"** இன் முதுபெரும் எழுத்தாளர். மட்டக்களப்பு துறைநீலாவணையைச் சேர்ந்த பிரபல யோகா சிகிச்சை நிபுணர். இவர் வாழைச்சேனைக் தேசிய கடதாசி கூட்டுஸ்தாபனத்தில் பல்வேறு பதவிகளை வகித்து ஓய்வு பெற்றவராவார்.



குடும்ப மருத்துவத் தொடர்

05

# மனித வாழ்வு கருவறை முதல்........

- Dr.K.அருளானந்தம் (MBBS, D,F,M) விரிவுரையாளர்
சௌக்கியபராமரிப்பு கற்கைகள் பீடம், கிழக்குப்பல்கலைக்கழகம். -

## குழந்தையின் 9, 10ஆம் மாதங்களில்

9 ஆவது மாதமளவில் குழந்தை மற்றவர்களை அறியத்தொடங்குவதன் ஊடாகத் தன்னைத் தனித்துவப் படுத்துகிறது. தானும் தன் நிலையை உயர்த்த நிமிர்ந்து நடக்க முற்படுகிறது. விளையாட்டுப் பொருட்களையும், ஏனைய மனங்கவரக் கூடிய பொருட்களையும் பெறுவதற்கு முயல்கிறது. இதற்காகத் தன்னைத் தயார்படுத்துகிறது. இதன் விளைவாகப் பாதங்களை உயர்த்திப் பதிக்கத் தொடங்குகிறது.

தனது பிறப்பின் அண்ணளவான மூன்று மடங்கு நிறையை தனது பாதத்தின் பெருவிரல்களை உந்துவதன் மூலமாக நிமிரத் தொடங்குகிறது. உடலை நேராகச் சமநிலைப்படுத்த முயற்சிக்கிறது . இதன்போது நிலத்தில் தவறிவிழுவதுமுண்டு. இதனைத் தொடர்ச்சியாகச் செய்வதன் மூலம் நிமிர்ந்து நடக்க - தனது பாதங்களைப் பதிக்க ஆரம்பிக்கிறது.

ஓரிரு அடிகளை வைத்துப் பெற்றோரையும், மற்றோரையும் மகிழ்விக்கிறது. இதனூடாக உற்சாகமடைந்த குழந்தை இதைத் தொடர்கிறது. இப்பருவத்தில் குழந்தை உற்சாகமாகக் காணப்படுவதனால் நித்திரை தவிர்ந்த நேரங்களில் எந்தச் சூழ்நிலையிலும் நடக்க முயற்சித்துக் கொண்டேயிருக்கும். இதனை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிவரும்.

தனது உணவுப் பழக்கத்திலும் மாற்றங்களைச் செய்யத் தொடங்குகிறது. முட்டை போன்ற புரத உணவுப் பொருட்களை குழந்தை உண்ணத் தொடங்குகிறது. ஏற்கனவே உட்கொண்ட உணவு வகையிலும் மாற்றம் ஏற்படுகிறது. குழந்தையின் எடையும் அதிகரிக்கிறது. கிட்டத்தட்ட பிறப்பின் 3 மடங்கை 1 வயதில் அடைகிறது.

குழந்தை தானும் பெரியவர்கள் போல் மேசையில் ஒன்றாக அமர்ந்து உணவு உண்ண ஆசைப்படும். இந்நிலையில் ஆட்களை நன்கு வேறுபடுத்தி பிறந்தநாள் கொண்டாடத் தன்னைத் தயார்படுத்துகிறது. முதலாவது பிறந்தநாளை தான் விரும்பாவிட்டாலும் பெற்றோரும் உறவினர்களும் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். இது பொதுவாகக் குழந்தைகளைச் சமூகத்துக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வாகக் கருதப்படுகிறது.

எனினும் இன்றைய காலத்தில் தனது பிறந்தநாளை தனது புகைப்படத்துடன் தான் மற்றவர்களை அழைப்பது போல் அழைப்பிதழ்கள் தயாரிக்கப்படுகிறது. குழந்தை எந்தவிதமான மனஉளச்சலும் இன்றி விரும்பிய பொருளை- விரும்பிய கருவியை - விரும்பிய சூழலை நாடித் தனது தேவைகளை இனங்காட்டுகிறது.

இந்நிலையில் தன்னுடைய தொடர்பாடல்களை நடவடிக்கைகள் ஊடாக வெளிக்காட்டத் தொடங்குகிறது. ஓரிரு மழலைச் சொற்களையும், சில பொதுவான சொற்களையும் நன்கு உச்சரிக்கும். தனது பெயரை பிறர் உச்சரித்தவுடன்- தான் என்பதை நன்கு உணரத் தொடங்கும்.

இக்காலப்பகுதியில் மூளைவளர்ச்சியும், உடல் வளர்ச்சியும் படிப்படியாக வளர்ந்து கொண்டேயிருக்கும். ஓரிரண்டு முன்பற்களும் வளரத் தொடங்கும். இந்தப் பருவத்தில் குழந்தைக்குப் பொதுவாகச் சுவாசத் தொகுதியின் ஊடான சில நோய்களும், சமிபாட்டுத் தொகுதிகள் ஊடான சில நோய்களும் வரக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கும்.



வீட்டு விபத்துக்கள் அதிகம் ஏற்பட வாய்ப்புண்டு. மேலும் ஆண்பிள்ளையைப் பெண்பிள்ளையாகவோ, பெண்பிள்ளையை ஆண்பிள்ளையா கவோ ஆடைகளைக் கொண்டு மாற்றிக் கொள்ளலாம். அத்தோடு குழந்தையின் மிகமுக்கியமான காலமாக இப்பருவம் அமைகிறது.

# " தென்றல் "
# குறுக்கெழுத்துப் போட்டி
# இல - 10

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | | ■ | 10 | | | |
| ■ | ■ | ■ | 11 | | ■ | | ■ |
| 12 | 13 | 14 | | | 15 | ■ | 16 |
| 17 | | | ■ | 18 | | 19 | |
| | | | ■ | ■ | 20 | | |
| ■ | 21 | | | ■ | ■ | | |

## இடமிருந்து வலம்

01. பொறுமைக்கு உதாரணம். அகழ்வாரைத் தாங்கும்.
04. முதலிரண்டு எழுத்துச் சேர்ந்தால் தேன்; பின்னிரெண்டு எழுத்துச் சேர்ந்தால் வெளிநாட்டுச் சீமான்; நடுவெழுத்து இல்லா விட்டால் வனத்தில் வாழ் விலங்கு; மூவெழுத்தும் சேர்ந்தால் தமிழ் வளர்த்த நகர்.
07. தலைகாக்கும்; தக்க தருணத்தில் உயிர் காக்கும்.
08. வெட்டும் ஆயுதம்.
09. அதிர்ச்சி (குழம்பியுள்ளது).
10. சுபகாரியங்களுக்கு இதைப் பார்ப்பது மூட நம்பிக்கையென புத்திஜீவிகள் வாதிடுகின்றனர். (குழம்பியுள்ளது)
11. துகில்.
12. உலகப் பொதுமறை.
17. சாகரம்.
18. மங்கையர் அஞ்சன மை தீட்டி அழகாக்கும் உறுப்பு.
20. கணை.
21. இதற்குப் பொய் அழகு என்பர்.

## மேலிருந்து கீழ்

01. ஆயர்பாடிக் கண்ணனை நச்சுப் பாலூட்டி கொல்ல முயன்றவள்.
02. வாயு மைந்தன்.
03. தோல் வியாதிகளுள் ஒன்று
04. நட்சத்திரங்களுள் ஒன்று .
05. எதிரி . (குழம்பியுள்ளது)
06. பரி (தலைகீழ்)
10. உலகியல் வழக்கத்திற்கு விதி விலக்கானது. (குழம்பியுள்ளது)
11. எலி .
12. தினம்.
13. பரமசிவன் கழுத்திலிருக்கும் பாம்பு இதற்குப் பயப்படாது. (குழம்பியுள்ளது)
14. குடலுள் நீர்ப் பற்றாக் குறையை அறிவிக்கும் சமிஞ்ஞை.
15. இறைவனால் வழங்கப்படுவது. (தலைகீழ்)
16. மதி .
19. உருண்டை வடிவான பொன்னிற பூப்பூக்கும் நிழல் தரும் மரம்.

* விடைகளை இங்கு வெளியாகியுள்ள கூப்பனில் எழுதிக் கத்தரித்து, தபால் அட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும்.
* தபால் உறைக்குள் வைத்து அனுப்பப்படும் கூப்பன் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
* முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக 300/- 200/-, 100/- வழங்கப்படும்.
* போட்டி முடிவுத்திகதி 15.03.2013
* விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :-

**"தென்றல்"**
**குறுக்கெழுத்துப் போட்டி இல.10**
**44/1, பழைய கல்முனை வீதி, கல்லடி,**
**மட்டக்களப்பு.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 09 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 தே | 12 ர் | 13 த | 14 ல் | | 2 ப | 15 சு | 16 மை |
| 3 ன் | வ | ய | கு | | | 4 னை | ஆ |
| | 5 ய | ம் | ங் | 17 ப | 18 க | | |
| | 6 க | ந் | த | க | ம் | | 20 மி |
| 21 வே | | ப | | 7 வி | ப | ர | ம் |
| 8 தா | லி | | 22 அ | | 9 ள | மி | கு |
| ந் | | 10 ம் | ல | பூ | ம் | 19 தா | |
| தி | | | ரி | | | 11 ம் | ஓ |

## "தென்றல்" குறுக்கெழுத்துப் போட்டி இல. - 09 இல் வெற்றி பெற்றோர்

### முதலாம் இடம்

மு.ச.பாத்திமாறனூஸா
430,வாசிகசாலை வீதி
ஏறாவூர்-01.

### இரண்டாம் இடம்

எஸ்.பரமசிவன்
காளிகோவில் வீதி
குருமன்காடு
வவுனியா.

### மூன்றாம் இடம்

த.வினோதினி
12, உருத்திரா மாவத்தை
வெள்ளவத்தை
கொழும்பு.

### பாராட்டுப் பெறுவோர்

- இ.கீதா
  மடுல்சீமை.
- என்.ரமேஷ்
  கிளிநொச்சி .
- ந.பவளமலர்
  திருப்பழுகாமம்.
- வ.சங்கரி
  மண்டூர்.

வாடிக்கையாளர்களுக்கு இனிய புதுவருட, தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!!!

**ஆரையம்பதியில்......**

அழகிய 22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்ய வேண்டிய ஒரே இடம் தங்க நகைகளின் சொர்க்காபுரி



**அபிராமி ஜீவல்ஸ்**

பிரதான வீதி
ஆரையம்பதி – 02
தொ.பே : 065 – 3644944
077 – 6506329

AD/0008

வாடிக்கையாளர்களுக்கு இனிய புதுவருட, தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!!!

அம்மன் துணை

**லக்ஷனா கொம்பியூட்டர் சீல்**

*Pre - Ink (Five Colour)*



*Polymer Stamp*


ஒரு மணித்தியாலத்தில் தரமாக செய்து தரப்படும்.

வெயிலி வீதி. அரசடி, மட்டக்களப்பு.
தொ.பே : 065 36 470 57, 077 69 155 74.
*E-mail -ladshana@gmail.com*

AD/0024

வாடிக்கையாளர்களுக்கு இனிய புதுவருட, தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!!!

மட்டு நகரில்......
அழகிய 22 கரட் தங்க நகைகளை
உத்தரவாதத்துடன் செய்து
பெற்றுக்கொள்ள நாட வேண்டிய
தங்க நகைகளின் சொர்க்காபுரி



**சுபாஜினி ஜுவலரி**



51, பிரதான வீதி
மட்டக்களப்பு.
தொ.பே: 065-2224863

AD/0005

# விலங்குகளின் விநோதம்

- சி.டானியல் -






# புலமைப்பரிசில் பரீட்சை (2012)ல் சித்திபெற்றோர் விபரம்

மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம்



அருளானந்தம் அருட்ஜெனித்
புள்ளிகள் – 165

மட்/ஆரையம்பதி இராமகிருஷ்ண வித்தியாலயம்



ஜெயக்குமார் திலோத்தமன்
புள்ளிகள் – 161



சரவணபவான் ரிசான்
புள்ளிகள் – 159



சுந்தரராஜா பிரகனாத்
புள்ளிகள் –148

## மட்/திருப்பழுகாமம் விபுலானந்த வித்தியாலயம்



கனகலிங்கம் மதுமிதா
புள்ளிகள் – 170



நவநாதப்பிள்ளை திசாந்
புள்ளிகள் – 156



யோகேஸ்வரன் சஜீவன்
புள்ளிகள் – 156



தெய்வநாயகம் சுலக்ஷிகா
புள்ளிகள் – 151

## தேசிய மட்டத்தில் சாதனை!!!



மட்/ஓந்தாச்சிமடம் ஸ்ரீ விநாயகர் மகா வித்தியாலய மாணவன் சண்முகராசா. ரகுராஜ் தரம்-6 மாணவர்களுக்காக 2011ஆம் ஆண்டுக்கென நடத்தப்பட்ட சமூக - விஞ்ஞானப் பொது அறிவுப்போட்டியில் பங்குபற்றித் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார். இவரைத் "தென்றல்" வாழ்த்துகிறது!!!

# புலமைத் தேர்வுப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான விஷேட குறிப்புகள்-2013

## கணிதம்

இலக்கங்களைக் கொண்டு சிறிய எண்களை ஆக்கும் பே ாது, இடமிருந்து வலமாக சிறிய எண்ணிலிருந்து பெரிய எண்வரை ஏறுவ ரிசையில் இடப் பெறுமானங்களுக் கேற்ப எழுத வேண்டும்.


உதாரணம்:- 2 ,4 ,1 ,3

மேலே தரப்பட்டுள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக் கூடிய மிகச்சிறிய எண்ணை எழுதுக.

விடை:- 1234

## சுற்றாடல்

### பறவையின் உடல் அவயங்கள்




*பறவைகளின் உடல் இறகுகளால் மூடப்ப ட்டிருக்கும்.

*சிறகுகள் காணப்படும்.

*பெரும்ப ாலானவை முட்டையி ட்டுக் குஞ்சு பெ ாரிக்கும்.

### பிராணிகள் - ஏனைய பிராணிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ள மேற்கொள்ளும் உத்திகள்

01. ஓட்டுக்குள் புகுந்து கொள்ளல் - ஆமை, கடலாமை, நத்தை

02. சூழலுக்கேற்ப நிறத்தை மாற்றுதல் - பச்சோந்தி

03. வாலை அறுத்து வி ட்டுச் செல்லல் - பல்லி ,அறணை

04. முட்களைச் சிலிர்க்கும் - முள்ளம்பன்றி

05. தலையை மண்ணினுள் புதைத்தல்- தீக்கோழி

# தமிழ்

* அடைப்பில் உள்ள எழுத்துக்களிலிருந்து பொருத்தமான எழுத்தைத் தெரிவு. செய்து பின்வரும் சொற்களைப் பூரணப்படுத்துக.

ன ,ண ,ல ,ழ

01. நூா.....கம் 02. மா.....வன்

03. வ....க்கு 04. விமா.....ம்

*பின்வரும் சொற்களைப் பெ ாருத்தமாக்கிக் கருத்துள்ள வ ாக்கியமாக எழுதுக.

வெளியிடுவதில்/பத்திரிகை/பிரதான/வகிக்கிறது/இடம்/செய்திகளை

..........................................................................................

* பொருத்தமான நிறத்தற் குறியை இடுக.

உங்களுக்கு வெற்றி உண்டாகுக

## மரபுத் தொடர்களும்- பொருளும்

* அடியொற்றுதல் - பின்பற்றுதல்
* கண்திறத்தல் - அறிவு உண்டாதல்
* கழுத்துக் கொடுத்தல் - பிறர் துன்பத்தில் உதவுதல்
* கழுத்தறுத்தல் - நம்பிக்கைத் துரோகம் செய்தல்
* செவிக்கேறுதல் - கேட்பதற்கு இனிமைய ாக இருத்தல்
* தலைகீழாய் நிற்றல் - பிடிவாதமாய் இருத்தல்
* கைகொடுத்தல் - உதவி செய்தல்
* தலைமறைதல் - ஒளிந்திருத்தல்
* கண்மூடுதல் - இறத்தல்
* கைகூடல் - அநுகூலமாதல்

## தென்றலின்
## ஊர்வலம்

# தொழிற்பயிற்சிக் கண்காட்சியும், விற்பனையும்

பட்டிருப்பு கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவால் பட்டிருப்பு வலய அலுவலக கேட்போர் கூடத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட தொழிற்பயிற்சிக் கண்காட்சியும், விற்பனையும் அண்மையில் இடம்பெற்றது.







இக் கண்காட்சியில் முக அலங்காரமும் - மணப்பெண் அலங்காரமும், துணியில் கை வேலையும் - கைஅலங்காரமும், தைக்கப்பட்ட ஆடைகள், செல்லிடைத் தொலை பேசி திருத்துதல் போன்றன இடம்பெற்றிருந்தன.

இக்கண்காட்சிக் கூடத்தை பட்டிருப்புக் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

# ஓய்வு பெற்றார்!!!



ஈச்சந்தீவு - கன்னன்குடா ப.நோ.கூ. சங்க பொது முகாமையாளராகக் கடமையாற்றிய சீ.விநாயமூர்த்தி தனது 59 ஆவது வயதில் ஓய்வுபெற்றார். இவர் 35 ஆண்டுகள் கூட்டுறவுத் துறையில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். அத்தோடு **"தென்றல்"** இன் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியுள்ளார். இந்நிலையில் இவரின் உன்னத சேவையைத் **"தென்றல்"** மனதார வாழ்த்துகிறது.



# வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் !!!

-கணபதிச் சித்தர்-

## லண்டனில் இருநண்பர்கள்



**மாறன்** :- என்ன மச்சான் புது மனைவி, எப்படிக் குடும்பம் போகுது !

**வீரன்** :- ஏன்ரா கலியாணம் முடித்தேன் என்று இருக்கு!

**மாறன்** :- என்ன பிரச்சினை?

**வீரன்** :- ஆட்டுக்கல், அம்மி , திருகை, உரல், உலக்கை வேண்டுமாம்.

**முகப்பில்..........**

பெரியகல்லாறு மெதடிஸ்தமிஷன் ஏஞ்சல்ஸ் பாலர் பாடசாலையில் இடம்பெற்ற பாலன் பிறப்பை வரவேற்கும் நிகழ்வைக் காணலாம்.

(படம்+தகவல்:- ரவிப்ரியா)

# ஊடகவியலாளர் பாராட்டிக் கௌரவிப்பு!!!

பெரியகல்லாறு கடினபந்து விளையாட்டுக் கழகத்தின் 5ஆவது ஆண்டு விழா அண்மையில் பெரியகல்லாற்றில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கழகப் போஷகரும், அகில இலங்கைச் சமாதான நீதவானுமாகிய செ.கனகசுந்தரம் ஊடகத்துறையில் சிறப்பாகப் பணியாற்றிவரும் பா.கிருஷ்ணகுமாருக்குப் பொன்னாடை போர்த்திப் - பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.



(படம் + தகவல் - ரவிப்ரியா)

# பிரபஞ்ச அழகியாக மிஸ் அமெரிக்கா தெரிவானார்.....




பிரபஞ்ச அழகியாக **"மிஸ் அமெரிக்கா"** ஒலிவியா கல்போ அண்மையில் தேர்வானார். இவ் அழகிப் போட்டி பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் அமெரிக்கா லாஸ் வேகாஸ்சில் உள்ள பிளானட் ஹாலிவூட் கசினோவில் இடம் பெற்ற போட்டியிலே இவர் பிரபஞ்ச அழகியாகத் தேர்வானார்.

பல நாடுகளைச் சேர்ந்த 89 அழகிகள் கலந்து கொண்ட இப் போட்டியை 180 நாடுகளைச் சேர்ந்த மக்கள் கண்டுரசித்தனர்.

இப் போட்டியில் இந்தியாவைப் பிதிநிதித்துவப்படுத்திச் சென்ற ஷில்பாசிங் முதல் 10 இடங்களைக்கூட வகிக்கவில்லை என்பது இந்தியாவுக்குப் பலத்த ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

பிரபஞ்ச அழகிப் போட்டியின் இரண்டாவது இடத்தை பிலிப்பைன்சும், அடுத்தடுத்த இடங்களை முறையே வெனிசுவா, அவுஸ்திரேலியா, பிரேசில் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அழகிகள் வென்றனர்.

## விளையாட்டு வலம்





# ஓருநாள் போட்டியிலிருந்து ஓய்வு பெற்றார் சச்சின்!!!

இந்திய கிரிக்கெட் அணியின் மாஸ்டர் துடுப்பாட்ட வீரர் சச்சின் தென்டுல்கர்ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். இந்தத் தகவலை இந்திய கிரிக்கெட் வாரியமும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியமும் (பி .சி .சி .ஐ) உறுதி செய்துள்ளது.



உலகிலேயே ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரர் சச்சின். சதசாதனை உள்ளிட்ட எண்ணற்ற சாதனைகள் புரிந்த அவர் சமீப காலமாகக் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்று - இளம் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டுமென்ற விமர்சனம் எழுந்திருந்தது.

இந்நிலையிலேயே சச்சின் தென்டுல்கர் ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.




உடல் இடை குறைப்புப் பற்றிப் பேசும் போதெல்லாம் கேள்விப்படும் ஒரு விடயம் **"பழங்களை மட்டுமே உண்டு ஒரு வாரத்தில் இடை குறைப்பது"** இதுபற்றி அண்மையில் அமெரிக்காவின் **"G.M.மோட்டர்ஸ் நிறுவனம்"** கண்டறிந்தமுறை **"பழங்களை மட்டுமே உண்டு இடை குறைக்கும் வழி"**. இம்முறையை அமெரிக்காவின் **"Agriculture and food drug Administration"** அங்கீகரித்துள்ளது. ஒரு வாரத்தில் ஐந்து கிலோ இடை குறைப்புக்கு இம்முறை உத்தரவாதம் என்கிறார்கள்.

இந்த முறையில் ஐந்து நாளும் என்னென்ன சாப்பிடலாம் என்று அவர்கள் கூறும் முறையைப் பாரக்கலாம்.

**முதல் நாள்** :- எந்தப் பழங்களும் (வாழைப்பழம் தவிர்த்து) சாப்பிடலாம்.

**இரண்டாம் நாள்**:- அவித்த உப்பு சேர்த்த உருளைக்கிழங்கு சாப்பிடலாம். அதுதவிர - சமைத்த / சமைக்காத காய்கறிகள் எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம்.

**மூன்றாம் நாள்** :- பழங்கள்+காய்கறிகள் எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம்.

**(தவிர்க்க வேண்டியவை :- வாழைப்பழம் மற்றும் உருளைக்கிழங்கு)**

**நான்காம் நாள்** :- வாழைப்பழம்- டம்ளர் பால் இரவு- மரக்கறிச் சூப் குடிக்கலாம்.

**ஐந்தாம் நாள்** :- காய் கறிகள், ஒரு கப் சாதம், ஒரு பெரிய தக்காளி அத்தோடு நாள் முழுவதும் நிறைய நீர் குடிப்பது அவசியம்.

**ஆறாம் நாள்** :- காலை :- காய்கறிகள், ஒரு கப் சாதம், நிறையக் காய் கறிகள் நான் வெஜ், ஒரு கப் சாதம், மாட்டுக்கறி


**ஏழாம் நாள்** :- நிறையப் பழச்சாறு சமைத்த காய்கறிகள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சாப்பிடலாம்.

பிறகு என்ன? எட்டாவது நாளில் உங்கள் இடை குறைந்து விடும்.

(நன்றி- தமிழ் அருள்)

---

# சூரியனைச் சுற்றி ஒரு வர்ண வட்டம்



சூரியனைச் சுற்றி ஒரு வர்ண வட்டம் தென்படுவதாக இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தகவல்கள் வெளியாகியுள்ளன. வானவில்லில் உள்ள வர்ணங்களைப் போன்றே இந்த வட்டமும் காட்சியளிப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது. எமது நாட்டில் அண்மைக்காலமாக பல வினோத சம்பவங்கள் இடம்பெற்று வரும் நிலையில் இந்தக் காட்சியும் தென்பட்டுள்ளது. இந்தக் காட்சியினை வெற்றுக் கண்ணால் பார்க்கக் கூடியதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பிரித்தானியப் பெண் எழுத்தாளர் புக்கர் பரிசு பெற்றார்!!!

பிரித்தானியாவைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் ஹிலாரி மேன்டஸ் எழுதிய வரலாற்றுப் புதினத்துக்கு **"மான் புக்கர்"**-(**"Man Booker prize"**) கிடைத்துள்ளது. பொதுநலவாய நாடுகள் மற்றும் சிம்பாவேயைச் சேர்ந்த எழுத்தாளர்கள் ஆங்கிலத்தில் எழுதும் சிறந்த நாவலுக்கு ஆண்டுதோறும் **"புக்கர்"** பரிசு வழங்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் பிரித்தானியாவைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் **"ஹிலாரி மேன்டஸ்"** எழுதியுள்ள **"பிரிங் ஒப்தி வொடீஸ்"** என்ற வரலாற்றுப் புதினம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இது 1535ஆம் ஆண்டின் வரலாற்றுப் பின்னணியில் எழுதப்பட்டுள்ளது. இந்தப் புத்தகத்தைத் தேர்வு செய்த நடுவர் குழுவின் தலைர் **"பீட்டர் ஸ்டோதார்ட்"** கருத்துத் தெரிவிக்கையில் **"ஹிலாரி மேன்டஸ் மிகச்சிறந்த நவீன ஆங்கில எழுத்தாளர். வரலாற்றுக் கதை எழுதும் முறையை அவர் மாற்றியமைத்துள்ளார்"** என்றார்.




ஹிலாரி மேன்டனுக்கு புக்கர் பரிசு கிடைத்திருப்பது இது இரண்டாவது தடவையாகும். ஏற்கனவே அவர் எழுதிய **"வோல்ஃப் ஹோல்"** என்ற புத்தகம் 2009 ஆம் ஆண்டு இப்பரிசை வென்றது.

# 12 குழந்தைகளுடன் மகிழ்ச்சி பொங்க நத்தார் கொண்டாடிய லண்டன் தம்பதிகள்!

பண்டைய காலத்தில் 10ற்கும் மேற்பட்ட குழந்தைகளைச் செல்வங்களைப் பெற்று – பெரிய குடும்பமாக வாழ்ந்தார்கள். காலப்போக்கில் அது சுருங்கி, ஓரிரு குழந்தைகள் இருந்தாலே போதும் - எனச் சிறிய குடும்பமாக மாறிவிட்டது. ஆனால் இன்றைய சூழ்நிலைக்கு நேர்மாறாக இங்கிலாந்தின் கென்ட் பகுதியைச் சேர்ந்த மிகே(வயது-39), தானியா (வயது-38) என்ற தம்பதியினர் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கு 7 மகன்கள், 5 மகள்கள் என மொத்தம் 12 குழந்தைகள் இருக்கிறார்கள். மூத்த பிள்ளைக்குப் 16 வயதாக, இளைய பிள்ளை இசபெல்லா பிறந்து சிலமாதமே ஆகிறது. இதில் இரண்டு ஜோடி இரட்டைக் குழந்தைகளும் உள்ளனர்.



இந்தக் குழந்தைகளை மகிழ்ச்சியாக வைப்பதே தனது முழுநேரப்பணி என்று கூறும் தாய் தானியா அதிகாலை 5 மணிக்கே எழுந்து உணவு தயாரிக்கும் வேலையைத் தொடங்கி விடுவதாக தெரிவிக்கிறார்.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புதுவருட, தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!!!





ஆண், பெண் இருபாலாருக்கும் சகல விதமான சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும். வீதி ஒழுங்கு மற்றும் இயந்திரவியல் பற்றிய பாடங்கள் தரமான ஆசிரியர்கள் மூலம் ஒழுங்கு முறையில் இலவசமாக கற்றுக்கொடுக்கப்படும்.

VEHICLE HIRE



திருமணவைபவங்களுக்கு
கார் மற்றும்
சொகுசு பஸ்
வழங்கப்படும்.



இவற்றோடு சகல வாகனங்களுக்கும், லீசிங் கம்பனிகளுக்கும் தொகை மதிப்பீடு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு.........

## IYNGARAN LEARNERS

NO. 61, STATION CROSS ROAD
BATTICALOA
TEL: 065-4907370 / 077-3138372

AD/0026




வணசிங்கா பிரிண்டர்ஸ் 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு.